விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 25.04.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 145 | பக்கங்கள் : 16






## புலிகளின் வெடிபொருள் பொலிகண்டியில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 25

தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பிலான வெடிபொருள்கள் பொலிகண்டியில் மீட்கப்பட்டுள்ளன என்று வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை பொலிகண்டி புதுவளவு என்ற இடத்திலேயே இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

வெடிபொருள்களை செயலிழக்க வைப்பதற்கான தொழில்நுட்பத் திறன் தொடர்பில் கண்டறியப்படாத நிலை

15

### தமிழகத்தில் கொரோனா உச்சம்

# தென்னிந்திய மீனவரோடு தொடர்பை பேணாதீர்கள்!

## வடக்கு மீனவர்களிடம் கட்டளை தளபதி கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

இந்திய மீனவர்களுடன் இலங்கை மீனவர்கள் பேணிவரும் தொடர்புகள் காரணமாக வடபகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடையக் கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் என மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா எச்சரித்துள்ளார்.

15

## மைத்திரி – பஸில் இரகசிய பேச்சு!



கொழும்பு, ஏப். 25

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பசில் ராஜபக்ஷ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களுடன் அவசர கலந்துரையாடல்களை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு கடந்த 21ஆம் திகதி இடம்பெற்றதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, அமைச்சர்களான நிமல் சிறிபாலா டி சில்வா, மஹிந்த அமரவீர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறி

15

### நேற்று 826 பேருக்கு கொரோனா

## நாட்டில் கொரோனா பாதிப்பு ஒரு இலட்சத்தை தாண்டியது!

கொழும்பு, ஏப்.25

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை நேற்று ஒரு இலட்சத்தைத் தாண்டியது.

நாட்டில் மேலும் 826 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் இதுவரையான பாதிப்பு ஒரு இலட்சத்து 517ஆக அதிகரித்தது.

15

## ஈஸ்டர் குண்டு தாக்குதல் இதுவரை 702 பேர் கைது!

கொழும்பு, ஏப்.25

கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் இதுவரை 702 பேர் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்

15

## அரியாலையில் குளத்தில் குளித்தவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்ப்பாணம் அரியாலை - நாவலடிக்குளத்தில் குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த பிரதீபன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் கூறினார்.

### சுகாதார நடைமுறை பேணாவிடின்

## சந்தையையும் இராணுவம் நடத்தவேண்டி ஏற்படலாம்

### வவுனியா அரச அதிபர் எச்சரிக்கை

வவுனியா, ஏப். 25

சரியான சுகாதாரநடைமுறைகள் பேணப்படாவிடின் சந்தை செயற்பாடுகளை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் நடத்தவேண்டி வரும் என்று மாவட்ட அரசஅதிபர் சமன் பந்துலசேன எச்சரித்துள்ளார்.

கொவிட்-19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட

15

### யாழ். பல்கலைக்கழகத்தின்

## உயர் பட்டப்படிப்பு பீடத்தின் பீடாதிபதியாக கண்ணதாசன்

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதியாக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் பல்கலைக்கழகப் பேரவையால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

15



## ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புள்ள அனைவரும் கைது செய்யப்படுவர்!

### அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை



கொழும்பு, ஏப்.25

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கையின் பிரதிகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் துரிதமாக கைது செய்யப்படுவர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்

15

## யாழ். சிறையில் ஏழு பேர் உட்பட வடக்கில் 11 பேருக்கு கொரோனா

### இராணுவத்தினர் மூவரும் உள்ளடங்குவர்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்ப்பாணத்தில் மேலும் எட்டுப் பேர் உட்பட வடக்கில் 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுச் சனிக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 386 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது 11 பேருக்கு கொரோனா

15

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தையையும்...

வுள்ள நடவடிக்கைகள், தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சந்தை வியாபாரிகள் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். வெளி மாவட்ங்களில் இருந்தும் இங்கு வியாபாரிகள் வருகின்றனர். எனவே அந்த இடத்தில் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அப்பிடி நடக்கும் பட்சத்தில் தினச்சந்தை செயற்பாடுகளை விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு மாற்ற வேண்டி ஏற்படும்.

அங்கும் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாதவிடத்து கமநல திணைக்களங்களூடாக இராணுவத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு விவசாயிகளின் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

எனவே உங்களது ஏனைய உறுப்பினர்களிற்கு கொவிட் தொடர்பான உண்மை நிலையினை எடுத்துச்சொல்லி உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட இடர்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது- என்றார்.

## தென்னிந்திய...

“யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு நான் ஒன்றைக்கூறிக் கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் தயவு செய்து யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக தென்னிந்திய மீனவர்களோடு தொடர்புகளைப் பேணாதீர்கள்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வாறு நீங்கள் தொடர்புகளைப் பேணிக் கொள்வதன் மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தொற்று தீவிரமடையக் கூடிய ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் தற்பொழுது கொரோனா தொற்று நிலைமை மிகத் தீவிரமடைந்துள்ளது.

அந்த வைரஸ் இங்கு பரவினால் தொற்று நிலைமை தீவிரமடையும். எனவே இந்த விடயம் தொடர்பில் அவதானமாகச் செயல்படுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற கொரோனா தடுப்பு செயலணிக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ-எ-03)

## உயர் பட்டப்படிப்பு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பி.ரவிராஜன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இடம்பெற்ற உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி தெரிவில் பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் முன்னிலை பெற்றுத் தெரிவாகியுள்ளார்.

இதுவரை காலமும் உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதியாக விளங்கிய பேராசிரியர் கு.மிகுந்தனின் பதவிக்காலம் கடந்த பெப்ரவரி மாதத்துடன் நிறைவடைந்துள்ளது.

அதன்பின்னர், உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, ஒருவர் மட்டுமே விண்ணப்பித்திருந்த நிலையில் மீள் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதற்கமைய மூவர் குறித்த பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இதன்படி, விண்ணப்பித்திருந்த மூவரும் நேற்றுப் பேரவை உறுப்பினர்கள் முன்னிலையில் தமது எதிர்கால நோக்கு தொடர்பில் விளக்கமளித்ததைத் தொடர்ந்து, தெரிவு இடம்பெற்ற நிலையில் 26 வாக்குகளுடன் பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் முன்னிலை பெற்று பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். (அ-எ)

## ஈஸ்டர் தாக்கு...

வீரசேகர எச்சரித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரன் ரியாஜ் பதியுதீன் கைது செய்யப்பட்டனர்.

ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு உதவியமை, அவர்களுடன் தொடர்புகளைப் பேணியமைக்காக இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் நீண்டகாலமாக விசாரணைகள் இடம்பெற்று வந்தன. அந்த விசாரணை அறிக்கைகளின் எட்டுப் பிரதிகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டன. இந்த அறிக்கைகளில் குற்றவாளிகளாகப் பெயரிடப்பட்டுள்ள அனைவரையும் கைது செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது- என்றார். (அ-எ)

## யாழ். சிறையில்...

தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 7 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

அதுமட்டுமின்றி மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் மூவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ-03)

## நாட்டில்...

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து இதுவரை 94 ஆயிரத்து 155 பேர் குணமடைந்ததுடன், தொற்றால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 638ஆகப் பதிவாகியது.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 724 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, உலகளவில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நாடுகளில் ஒன்றாகவும் கொரோனா பாதிப்பு வரிசையில் நோர்வேக்கு அடுத்து 89ஆவது நாடாகவும் இலங்கை பதிவாகியது. (அ-எ)

## மைத்திரி - பஸில்...

லங்கா சுதந்திரக் கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு இடமளிக்க தவறியமை தொடர்பில் பஸில் ராஜபக்‌ஷ விடம் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பாக கட்சியிடமிருந்து திட்டங்களை சமர்ப்பிக்குமாறு பஸில் ராஜபக்‌ஷ, அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈஸ்டர் குண்டுத்...

களில் 202 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் 83 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-எ)

### திருகோணமலை வைத்தியசாலையில்

# தாதியர் ஐவர் உள்ளிட்ட 17 பேருக்கு கொரோனா!

திருமலை, ஏப். 25

திருகோணமலையில் பொது வைத்தியசாலை தாதியர் ஐவர் உள்ளிட்ட 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று சனிக்கிழமை மாத்திரம் 17 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ. பிரேமானந் தெரிவித்தார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதனடிப்படையில் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஏழு பேருக்கும், உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதியில் மூன்று பேரும், குச்சவெளி பிரதேசத்தில் 4 பேரும் கிண்ணியா பிரதேசத்தில் இருவரும், கந்தளாயில் ஒருவரும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றி வரும் தாதியர்கள் ஐந்து பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் இருவர் கொவிட் தடுப்பூசி பெற்றவர்கள் எனவும், வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலை நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இனங்காணப்பட்ட 3 பாடசாலைகளிலிருந்து ஆசிரியர் இருவரும் மாணவர் ஒருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அனைத்து கல்வி நிலையங்களை மூடுவதற்காக ஆலோசித்து வருவதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந் மேலும் குறிப்பிட்டார்.

# “கொழும்பு துறைமுக நகர் இலங்கையின் இறைமையை பாதித்தால் ஆதரிக்கமாட்டோம்”

கொழும்பு, ஏப். 25

எங்கள் நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பாக அமையும் எந்தவிடயத்தினையும் நாம் ஆதரிக்கமாட்டோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரம் பற்றி ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்-

நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பாக அமையும் எந்தவிடயத்தினையும் நாம் ஆதரிக்கமாட்டோம். எனினும் இது தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எமக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது. இதனால் 80 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது. அதிகமான அந்நிய செலவாணிகள் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மலேசியா உட்பட இன்னும் பல நாடுகளில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாதிப்பிற்குரியவிடயமல்ல. அதன் வரைபுகள் தற்போது உயர்நீதிமன்றில் இருக்கிறது. அவை திருத்தப்பட்டுவந்தால் மக்களிற்கு பாதிப்பில்லாத ஒரு நிலையில் இருக்கும் என எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்க்கட்சிகள் சொல்வது போல அச்சப்படுவதற்கு எதுமில்லை.

இதேவேளை, இலங்கையில் நடந்த தாக்குதலுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று அந்த சமூகத்தினுடைய மதத்தலைவர் அறிக்கை விடுகின்றார். அது தொடர்பாக சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. பலர் கைது செய்யப்படுகின்றார்கள். எனினும் கைதுசெய்யப்படுபவர்கள் நீதிமன்றில் அவர்களது நியாயங்களை கூறி அதில் தொடர்பில்லாதவர்கள் வெளியில் வரலாம் -என்றார்.

# ரிஷாத் எம்.பி. மற்றும் ரியாஜுக்கு 72 மணித்தியால தடுப்புக்காவல்

கொழும்பு, ஏப்.25

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரை தடுத்துக் காவலில் வைத்து விசாரிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் உத்தரவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 72 மணித்தியால தடுப்புக்காவல் உத்தரவொன்று பெறப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் நேற்று அதிகாலை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் குண்டுதாரிகளுக்கு உதவியமை மற்றும் நெருங்கிய தொடர்பைப் பேணியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (எ)

## புலிகளின்...

யில் சிறப்பு அதிரடிப்படையின் உயர் மட்டப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் வருகைக்காக காத்திருப்பதாகவும் வல்வெட்டித்துறை பொலிஸார் குறிப்பிட்டனர்.

# குப்பிழான் கன்னிமார் ஆலய

## தேர்த் திருவிழா இன்று

குப்பிழான் - வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இவ்வாலயத் தேர்த்திருவிழா நிகழ்வுகள் அனைத்தும் இன்று காலை-08.30 மணி முதல் ஆலயத்தின் உத்தியோகபூர்வ Facebook Page மற்றும் Youtube ஊடாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படும். இதற்கான ஏற்பாடுகளை மேற்படி ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பாதுகாப்பில் சமரசம் செய்யாது அரசு

## தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அமைச்சர் லொக்குகே எச்சரிக்கை



கொழும்பு,ஏப்.25

**மக்களின் பாதுகாப்பில் சமரசம் செய்ய அரசாங்கம் ஒருபோதும் தயாராக இல்லை என போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.**

தனியார் பஸ் உரிமையாளர்கள் புதிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால், பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகள், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பார்கள் எனக் கூறினார்.

மேலும், அவர்களுக்காக குறைந்த வட்டியுடன் கூடிய கடன் வசதிகள் மற்றும் பல கட்டணக் குறைப்பு உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இன்னும், மேலதிகமாக சலுகைகளை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், தனியார் பஸ் உரிமையாளர்கள் வழிகாட்டுதல்களை மீறுவதற்கும் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் அனுமதிக்காது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ)

# மகன் தாக்கி தந்தை மரணம்! மகன்கள் உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.25

குடும்பத் தகராறு காரணமாக மகனின் கண்மூடித்தனமான தாக்குதலில் தந்தை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்த நபரின் இரண்டு மகன்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் கலாசாலை வீதி- பாரதிபுரத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் 5 பிள்ளைகளின் தந்தையான இராசமணி இரத்தினசிங்கம் (வயது - 52) என்பவரே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மது போதையில் வீட்டுக்குச் சென்ற குடும்பத்தலைவர் மனைவியுடன் முரண்பட்டுள்ளார். வைத்தியசாலையில் பணியாற்றும் மனைவி வீடு திரும்பிய போது தகாத வார்த்தைகளால் தந்தை திட்டியதால் ஆத்திரமடைந்த மகன் ஒருவர் அவரை கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளார்.

அத்துடன், மைத்துனர் ஒருவரும் அவரைத் தாக்கியுள்ளார்.

நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற நிலையில் குடும்பத் தலைவர் அசைவற்றுக் கிடந்துள்ளார்.

காலையில் அவர் உயிரிழந்தமை தெரியவந்ததையடுத்து கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் கோப்பாய் பகுதியில் பற்றைக்காணியில் மறைந்திருந்த பிரதான சந்தேகநபரான மகனை பொலிஸார் கைது செய்தனர். மற்றொரு மகனும், மைத்துநர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் நீதிவான், உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (எ)

# ஜனநாயக விரோத செயல்பாட்டில் அரசு! ரிஷாத்தின் கைதுக்கு ஹக்கீம் கண்டனம்

கொழும்பு,ஏப்.25

முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டமை ஊடாக, நாட்டின் சட்டவாட்சி அதல பாதாளத்துக்குச் சென்றுள்ளமையை உணர முடிந்துள்ளது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மேலும், இந்த ஜனநாயக விரோதச் செயல்பாட்டுக்கு கடும் கண்டனத்தை தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் ரவூப் ஹக்கீம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

புனித ரமழான் மாதத்தின் நள்ளிரவில், ரிஷாத் பதியுதீன் சபாநாயகரின் அனுமதியோ, நீதிமன்ற உத்தரவோ இன்றி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிரடியாகக் கைது செய்யப்பட்டமை மிகவும் கவலையளிக்கின்றது.

இந்த செயல்பாடு அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை மேலும் கேள்விக் குறியாக்குகின்றன. மேலும், ஈஸ்டர் தாக்குதல்கள் இடம்பெற்று இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில், விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆனாலும், கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்டோர் குறித்த அறிக்கை தொடர்பில் அதிருப்தி வெளிப்படுத்தியதுடன் அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றன.

அந்தவகையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரி யார் என்பதை மறைத்து, மக்களை திசை திருப்பும் விதமாகவே இந்தக் கைதுகள் இடம்பெற்று வருகின்றன.

முஸ்லிம்கள் மத்தியில் பிரபலமான அரசியல்வாதிகளை தொடர்புபடுத்துவதன் வாயிலாக பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே முஸ்லிம் சமூகத்தின் மீது மேலும் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாகவே இதனைப் பார்க்கத் தோன்றுகின்றது.

தேர்தலை நோக்காகக் கொண்டு அப்பாவி பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக இவ்வாறான கைதுகள் இடம்பெறுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# நாட்டில் மீண்டும் மலேரியா அபாயம்

கொழும்பு,ஏப்.25

நாட்டில் மீண்டும் மலேரியா உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என மலேரியா ஒழிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது மலேரியா பரவுதல் இல்லை என்ற போதிலும், உலகில் மலேரியா அதிகளவில் பரவியுள்ள நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும், மலேரியாவை பரப்பும் நுளம்புகள் நாட்டில் இருப்பதாலும் ஆபத்து காணப்படுவதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

உலக மலேரியா தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 25ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் இவ் வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மலேரியா இல்லாத நாடாக 9 வருடங்களை நிறைவு செய்து, உலக மலேரியா தினத்தை இலங்கை அனுஷ்டிக்கிறது.

கடந்த 2012 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து மலேரியா முழுவதுமாக ஒழிக்கப்பட்டது. இதுதொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் 2016 இல் இலங்கைக்கு சான்றிதழ் வழங்கியிருந்தது. (எ)

# தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

## அரசிடம் வடிவேல் சுரேஷ் கோரிக்கை

கொழும்பு,ஏப்.25

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நாளாந்த சம்பளமாக 1000 ரூபா வழங்கப்படுகிறது என்பதற்காக வழமையை மாற்றி மேலதிக கொடுப்பனவை வழங்காமல் இருக்க முடியாது.

கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்த நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே தொழிலுக்குச் செல்கின்றனர்.

எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவ



தற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

அச்சத்தின் மத்தியிலேயே அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதேபோன்று பாடசாலைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

மலையக பல்கலைக்கழகம் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பெருந்தோட்டங்களில் எந்தவொரு முறையான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. பாராளுமன்றத்துக்குள் நுழையும் போது பாதுகாப்புடன் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது- என்றார். (எ)

# பஸ்கள் பற்றி பயணிகள் முறைப்பாடு செய்யலாம்

கொழும்பு,ஏப்.25

அரச மற்றும் தனியார் பஸ்களில் பயணிகள் ஆசன அடிப்படையில் மாத்திரம் பயணம் செய்ய வேண்டும். பஸ்களில் சமூக இடைவெளியைப் பேணுவது அத்தியாவசியமாகும். சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத பஸ் சாரதி,



நடத்துநருக்கு எதிராகப் பயணிகள் முறைப் பாடு செய்யலாம் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பொதுப் போக்குவரத்து சேவையின் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

கொரோனா வைரஸ் பொதுப் போக்குவரத்து சேவை ஊடாகத் தீவிரமாகப் பரவலடைவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுவதாக சுகாதாரத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

சுய பாதுகாப்பு குறித்து மக்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்புடன் செயல்பட வேண்டும். அனைத்து விடயங்களையும் பின்பற்றுமாறு கட்டளை பிறப்பிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

கல்வி TV CHANNEL-1

காலை

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

பகல்

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

இரவு

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
25.04.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, சித்திரை 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# யார் அந்த முக்கிய புள்ளி?

ஆளும் பொதுஜன பெரமுன பங்காளிகளுக்கிடையில் முரண்பாடுகள் இருக்கின்றன - என்பது இப்போது இரகசியமான ஒன்றல்ல. வெளியில் தெரியக் கூடியவாறும், தெரியாத வகையிலும் ஒரு முரண்பாடு அரசாங்கத்தை மெதுவாக உலுக்கிக்கொண்டிருக்கின்றது. இந்த முரண்பாடுகளின் உண்மையான பின்னணி என்ன? இது பற்றி பல வகையான அபிப்பிராயங்கள் உலவுகின்றன. இதில் எதுசரி - எது பிழையென்பதை துல்லியமாக எவராலும் கணிக்க முடியாது. ஆனால், அரசாங்கத்திற்குள் முரண்பாடொன்று வேரூன்றி விட்டது என்பது மட்டும் உண்மை. ஆனால், இந்த முரண்பாடுகளின் அடிப்படையாக ஒரு பலம் பொருந்திய புள்ளி கட்சிக்குள் இருப்பதாகவும், அவரே அனைத்தையும் இயக்குவதாகவும் கூறப்படுகின்றது. மே தினத்திற்கு தடை விதிக்கப்பட்டதை தவறென்று கூறியிருக்கும் விமல் வீரவன்ஸ, இது மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுதலிப்பதாகும். தாம் மே தினத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நிலையிலேயே, அரசாங்கம் இவ்வாறானதோர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. ஜனாதிபதியையும் பிரதமரையும் இயக்கும் ஒரு முக்கிய புள்ளியே இந்த முடிவுக்கு பின்னாலும் இருந்திருக்கின்றார் என்று கூறுகிறார்.

அண்மையில், உதய கம்மன்பிலவும் இவ்வாறானதொரு தொனியிலேயே பேசியிருந்தார். அரசாங்கத்திற்குள் நிலவுகின்ற முரண்பாடுகள் தொடர்பில் பேசுகின்றபோதும், அரசாங்கத்திற்குள் இருக்கும் ஒரு பலம் பொருந்திய நபரே அனைத்து முரண்பாடுகளுக்கும் காரணமாவார். அவரே அரசாங்கத்தை தவறான வழியில் நடத்த முற்படுகின்றார்.

விமல் வீரவன்ஸ கூறும், உதய கம்மன்பில கூறும் அந்த முக்கிய புள்ளி யார்? அரசாங்கத்தை பொறுத்தவரையில், ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்களே சக்தி வாய்ந்த நபர்களாவர். அவர்களை விடவும் பிறிதொரு சக்திவாய்ந்த நபர் கட்சிக்குள் இருக்கமுடியாது. இந்த நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர்மீதும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய பிறிதொருவர் இருக்க முடியுமானால், அது நிச்சயம் அவர்களது வரிசையில் இருக்கும், பிறிதொரு சகோதர அரசியல்வாதியான, பசில் ராஜபக்ஷவாகவே இருக்க முடியும். அவ்வாறாயின், விமல் வீரன்ஸவும் கம்பன்பிலவும் கூறும் அந்த முக்கிய புள்ளி, பசில் ராஜபக்ஷவா? ஏனெனில், மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களால் அரசியலில் செல்வாக்குச் செலுத்தமுடியாது - அவ்வாறானதோர் ஆளுமையும் அவர்களுக்கில்லை.

அரசாங்கம் தொடர்பில் ஆரம்பத்தில் காணப்பட்ட அபிப்பிராயங்கள் தற்போதில்லை. எவ்வாறு ஆரம்பத்தில் நல்லாட்சி அரசாங்கம் பிரமாண்டமானதொரு நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு, பின்னர் படிப்படியாக அதனை இழந்துபோனதோ, அவ்வாறானதொரு தோற்றமொன்றே, ராஜபக்ஷக்களின் புதிய அரசாங்கத்திலும் தெரிகின்றது. 20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அனைத்தும் மிகவும் சுமுகமாகவும் வேகமாகவும் நகருமென்றே பலரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், விடயங்கள் அவ்வாறு நிகழவில்லை. அரசாங்கத்தை முன்கொண்டு செல்வதில் முட்டுக்கட்டைகள் அதிகம் இருப்பதான தோற்றமே தற்போது தெரிகின்றது.

ஆரம்பத்தில் மிகவும் பிரமாண்டமாக தென்பட்ட, ஜனாதிபதி கோட்டாபயவின் விஜத்மக அமைப்பின் நகர்வுகளும் தற்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது. ஒருபுறம் ஜனாதிபதி, இன்னொரு புறம் பிரதமர், பிறிதொரு புறம் பசில் ராஜபக்ஷ. இவற்றுக்கு அப்பால், விமல் வீரவன்ஸ, கம்மன்பில போன்ற கடும் சிங்கள - பௌத்த தேசியவாத அணியினர். இவற்றுக்கு வெளியில், அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவந்தவர்கள் நாங்களே - எனக் கூறிக்கொள்ளும் செல்வாக்கு மிக்க பிக்குகள் அணியொன்று. இவர்களுக்கிடையில் அகப்பட்டு, அடுத்த கட்டம் என்ன என்னும் கேள்வியுடனேயே அரசாங்கம் நாட்களை நகர்த்துவதாக தெரிகின்றது. இந்த நிலைமை அரசாங்கத்திற்கு மேலும் பின்னடைவுகளை கொடுக்கக் கூடும்.

# சமஷ்டி தீர்வு!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்கள் வேண்டுவதெல்லாம் சமஷ்டியே தவிர, வேறெதுவுமல்ல.

இதனை தமிழரசுக் கட்சியின் ஆரம்பத்திலேயே தமிழ் அரசியல் தரப்பினர் தெளிவுறத் தெரிவித்திருந்தனர். சமஷ்டி முறையின் அடிப்படையிலேயே தமிழரசுக்கட்சிகூட ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் நேர்மையான, அதேசமயம் நாட்டுக்கும் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கும் நன்மை தரக்கூடிய சமஷ்டி அடிப்படையிலான ஓர் அதிகார பரவலாக்கத்தை தவிர்த்து, தற்போது மீளவும் சமஷ்டி ஆட்சிக்கு வாய்ப்புண்டு என்று சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம் ஜயந்த குறிப்பிட்டுள்ளமை, சமஷ்டி முறையின் முக்கியத்துவத்தை தென்னிலங்கை அரசியல் தரப்பு தற்போது உணர ஆரம்பித்துள்ளதையே காண்பிக்கின்றது.

**கையாலாகாமை**

இதேசமயம், இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அடிப்படையில் ஒரு சமஷ்டி அமைப்பை கட்டியெழுப்பக்கூடிய வாய்ப்பை தவறவிட்டமைகூட தமிழ் தரப்பின் கையாலாகாத்தனம் என்றே குறிப்பிடமுடியும். ஒரு தெளிவான அரசியல் தீர்க்க தரிசனம் இன்றி, மாகாண சபை மூலமாக அடுத்த கட்ட நகர்வாக சமஷ்டி ஆட்சி முறைக்கு செல்லக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பங்களைக்கூட தமிழ் அரசியல் தரப்பு கோட்டை விட்டிருந்தது.

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணசபை என்பது, தமிழ் அரசியல் தரப்பை பொறுத்தவரை ஒரு வரப்பிரசாதமென்றே குறிப்பிட முடியும். ஏனெனில், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஸ்தாபிதம் குறித்து மறைந்த இந்திய பிரதமர் ரஜீவ் காந்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரனை தம்மருகே அழைத்து விரிவான விளக்கத்தை வழங்கியிருந்தார். மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்ளுங்கள். அதற்கு பக்க பலமாக நாமிருப்போம் என்று ராஜீவ் காந்தி அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனிடம் கூறியிருந்தார்.

ஆனால், அப்போது ராஜீவ் காந்தி வழங்கிய உறுதிமொழியின் முக்கியத்துவத்தை உணராது, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான வடக்கு - கிழக்கு மாகாண சபையைக்கூட நிராகரித்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகள், பின்னர் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு ஆதரவாக வந்திருந்த இந்திய அமைதி காக்கும் படையினரையும் விரட்டியடிக்கும் பாங்கில் நடந்துகொண்டிருந்தனர்.

**தூர நோக்கின்மை**

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை ஒரு தூர நோக்கு கொண்ட பார்வை அவர்களிடம் காணப்படாதிருந்ததையே அறியக்கூடியதாக இருந்தது. இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஏற்றுக்கொண்டு, மாகாண சபை ஆட்சிமுறையையும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டிருக்கும் பட்சத்தில், வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு மட்டுமல்ல, இன்றைய பூகோள அரசியலைப்பொறுத்தவரை இந்தியாவுக்குக்கூட நன்மை பயப்பதாகவே வடக்கு - கிழக்கு மாகாண ஆட்சிமுறை அமைந்திருக்குமென்று கருதமுடியும். சீனாவின் ஆதிக்கமாக தென்னாசியாவில் இலங்கையின் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் விரிவடைந்து வரும் நிலையில், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இந்தியா தனது பிராந்திய அரசியலை வலுப்படுத்த ஒரு பலமான களமாககூட அமைந்திருக்க முடியும்.

ஆனால், இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களை தவறவிட்டதோடு, தற்போது மீளவும் 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற நிலைக்கே தமிழ் அரசியல் தரப்பு தள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில், சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம் ஜயந்த, சமஷ்டி அடிப்படையிலான அதிகார பரவலாக்கத்துக்கு வாய்ப்புகளுண்டு. ஆனால், தனி நாட்டுக் கோரிக்கைக்கோ அல்லது நாட்டை பிளவு படுத்தும் கோரிக்கைக்கோ இடமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். வடக்கு - கிழக்கு தமிழர்களை பொறுத்தவரை, இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் அவர்கள் சமஷ்டிக் கோரிக்கையை முன்னிறுத்தினார்களே தவிர, ஒருபோதும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்னிறுத்தவில்லை. ஆனால், தமது அரசியல் கோரிக்கைகள் யாவும் தட்டிக்கழிக்கப்படுகின்றன என்பதை அறிந்த நிலையிலேயே அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்னிறுத்தியிருந்தனர்.

ஆயினும், தற்போது மீளவும் பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம் ஜயந்த சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வுத்திட்டம் பற்றி பிரஸ்தாபித்துள்ளமை, தென்னிலங்கை அரசியல் கோதாவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையே எடுத்தியம்புவதாக இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



ஏப்ரல் - 25 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - சித்திரை - 12
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : திதித்துவயம்



## இன்றைய ராசிபலன்

**25.04.2021**

**மேடம்**

எதிர்பாராத வரவுகள் வந்து மனதை மகிழ்விக்கும் நாள். முயற்சி காரணமாக தொழிலில் மேன்மையும், உயர்வும் கிட்டும். நல்ல விஷயம் ஒன்றில் உறவினர்களின் ஒத்துழைப்பு உண்டு.

**இடபம்**

ஆவலுடன் எதிர்பார்த்த செய்தி அரசாங்கத்திடம் இருந்து வரும். சுபநிகழ்ச்சி பற்றிய பேச்சுக்கள் நல்ல முடிவை எட்டும். பணியாளர்களுக்கு ஏற்பட்டிருந்த தொல்லை அகலும் நாள்.

**மிதுனம்**

பக்குவமாகப் பேசி அனுமதி ஒன்றைப் பெறுவீர்கள். நீண்ட நாளையப் பிரச்னை ஒன்று தீரும். மகிழ்ச்சி கூடும். மனஉறுதியுடன் செயல்பட்டு இடரிலிருந்து வெளிவருவீர்கள்.

**கடகம்**

மற்றவர் ஆலோசனையை கேட்டு நடப்பதன் மூலம் நன்மை உண்டு. உடல் நலனில் கொஞ்சம் கவனம் தேவை. தாயாரால்நன்மை ஏற்படும். உங்களை விட்டு விலகிச் சென்றவரை பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

**சிம்மம்**

பிறர் கூறும் ஆலோசனையை ஏற்க வேண்டும். நட்பு வட்டம் விரியும். ஆடம்பரப் பொருளின் சேர்க்கை அவசியமானதா என்று யோசியுங்கள். தொழில் ரீதியாக புதிய ஊர்களுக்கு செல்வீர்கள். முயற்சி பலிக்கும்.

**கன்னி**

வீடு கட்டும் முயற்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற சிரமப்பட்டாலும் அதில் ஜெயிப்பீர்கள். நண்பர் ஒருவர் நற்செய்தி ஒன்றை சொல்லி உங்களை மகிழ்விப்பார்.

**துலாம்**

மகிழ்ச்சி சுற்றுலாவாக தொலைதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். தந்தை, தாயாரின் பாச மழையில் நனைவீர்கள். பணியில் சங்கடம் உண்டாகும். பிள்ளைகளின் வாழ்வில் நல்ல திருப்பம் ஏற்படும்.

**விருட்சிகம்**

சில நாளாக இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கும். எதையும் பலமுறை நன்கு யோசித்து செய்வது அவசியம். உங்களின் முயற்சிகள் சற்று நிதானமாக பலன் தரும். நிம்மதி கூடும்.

**தனுசு**

குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்ற அதிக முயற்சி தேவைப்படும். நற்செய்தி ஒன்று கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினர் நடந்து கொள்ளும் முறை மனத் திருப்தி தரும்.

**மகரம்**

ஆன்மிக நாட்டம் குறைவதுபோல் தோன்றும். பயம் நீங்கும். தொழில் ரீதியாக எடுக்கும் புது முயற்சி நல்ல வகையில் செல்லும். தொலைபேசி வழித் தகவல் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்

**கும்பம்**

முயற்சி கைகூடும். புதிய செலவுகள் செய்ய முன்வருவீர்கள். பொய்யர்களின் வாக்கை நம்பி நஷ்டப்படாமல் கவனமாக இருங்கள். காரணமே இல்லாமல் மனதில் சந்தோஷம் குடிகொள்ளும்.

**மீனம்**

சங்கடங்கள் நீங்கும். எதிர்பாராத விரயங்கள் குறையும். உடல் நலனுக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும். வெளியூர், வெளிநாட்டுப் பயணங்களைப் பற்றித் திட்டமிடுவீர்கள்.

# கொரோனா தொற்றின் பிடிக்குள் தமிழ்நாடு!

## ஒரேநாளில் 78 பேர் பலி 13,732 பேர் பாதிப்பு!

சென்னை, ஏப். 25

தமிழ்நாட்டில் கொரோனாத் தொற்றும் பலியெடுப்பும் தினம் தினம் அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினத்தில் மட்டும் மேலும்78 பேர்உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வரையான நிலவரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கையில் இத்தகவல்வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நேற்று முன்தினம் மலையுடனான கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் தொற்றுதியானவர்களது எண்ணிக்கை 13 ஆயிரத்து 732 ஆக புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

அதிகபட்சமாக சென்னையில் 3ஆயிரத்து 842 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் சிகிச்சை பலனின்றி 37 பேர் அங்கு உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் சென்னையில் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 3 இலட்சத்து ஆயிரத்து 541 ஆகவும், உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 4 ஆயிரத்து 512 ஆகவும் அதிகரித்துள்ளது.

இதையடுத்து தமிழ்நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்து 51 ஆயிரத்து 487 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் சிகிச்சை பலனின்றி மேலும் 78 பேர் உயிரிழந்துள்ளதை அடுத்து இதுவரை உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 13 ஆயிரத்து 395 ஆக உயர்ந்துள்ளது.

இதையடுத்து தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களது எண்ணிக்கை 95 ஆயிரத்து 48 ஆக உயர்வடைந்துள்ளது.

# வீட்டுக்குள்ளும் முக கவசம் அணியவேண்டிய கட்டாயம்

சென்னை, ஏப். 25

''கொரோனா தொற்று அதி தீவிரம் அடைந்துள்ள நிலையில் இனி வீட்டிற்கு உள்ளேயும் முக கவசம் அணிந்தாக வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது'' என தமிழ்நாடு மருத்துவர் எம்.ஜி. ஆர். மருத்துவ பல்கலை துணை வேந்தர் சுதா சேஷய்யன் கூறினார்.

அவர் கூறியதாவது:

கொரோனாதொற்றுஇதுவரை இல்லாத வகையில் உச்சத்துக்கு சென்றுள்ளது. சில மாதங்களுக்கு முன் ஒருவருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டால் அவருக்கு எங்கிருந்து தொற்று பரவியது என்பதை கண்டறிவது கடினமாக இருந்தது. மேலும் சம்பந்தப்பட்ட நபருடன்தொடர்பில்இருந்தவர்கள் எவரெவர் என்பதை தேட வேண்டிய நிலை இருந்தது. தற்போதோ குடும்பம் குடும்பமாக கொரோனா பாதிப்பு கண்டறியப் படுகிறது.

கணவருக்கு கொரோனா இருந்தால் அதற்கு அடுத்த சில நாட்களில்மனைவிக்கும் குழந்தைகளுக்கும் அறி குறிகள் தென்படுகின்றன. அவர்கள் அனைவருக்கும் தொற்று உறுதிசெய்யப்ப டுவதற்குள்ஏறத்தாழ 25 சதவீத நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டுவிடுகிறது. அதன்பின்மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டிய அவசியம்எழுகிறது. இதற்கு முக்கிய காரணம் குடும்பஉறுப்பினர்கள் ஒரே அறைக்குள் பல மணி நேரம் அருகருகே இருப்பது தான்.

அதேபோல கோடை காலத்தில் மூடப்பட்ட அறைக்குள் ஏ.சி. சாதனங்களை நீண்ட நேரம்இயக்குவதும் தொற்றுபரவுத லுக்கு வழி வகுக்கிறது.நாள்தோறும் வெளியே பணிக்கு சென்று வரும்குடும்ப உறுப்பினர்பிற உறுப் பினர்கள், குழந்தைகளிடம் இருந்து சற்று விலகி இருப்பதன்வாயிலாக நோய் தொற்று பரவலை தடுக்கலாம்.

அதேபோல அவர் தனியே தொடங்குவதும், தூங்கும் நேரம் தவிர பிற நேரங்களில் வீட்டிற்கு உள்ளேயும் முக கவசம் அணிய வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. சில காலத்துக்கு இத்தகைய கஷ்டங்களை சகித்து கொண்டால் கொரோனாவை வெல்ல முடியும். நம் குடும்பத்தின் நலனையும் காக்கமுடியும்-இவ்வாறு சுதா சேஷய்யன் கூறினார்.



# திண்டிவனம் அருகே ரசாயன ஆலையில் தீ

### பல லட்சம் ரூபா மூலப்பொருட்கள் எரிந்தன

சென்னை, ஏப். 25

திண்டிவனம் அருகே ரசாயன ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் ரூபா மதிப்புள்ள பொருட்கள் தீயில் எரிந்தன.

திண்டிவனம் அருகே பெரும்பாக்கம் கிராமத்தில் கடலூரைச் சேர்ந்த மாதவன் என்பவர் தின்னர் தயாரிக்கும் ரசாயன நிறுவனம் நடத்தி வருகிறார். இதில் 35-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட பரல்களில் தின்னர் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருந்தது. நேற்று முன் தினம் நிறுவனத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அப்போது பரல்களில் இருந்த தின்னர் எரிய தொடங்கியது. மேலும் அங்கு வைத்திருந்த மூலப்பொருட்கள், மின்சாதன பொருட்கள், கணினிகள் உள்ளிட்ட பல பொருட்கள் எரிந்து சேதம் அடைந்தன.

# தினசரி பாதிப்பு அடுத்த மாதத்தில் 19 ஆயிரமாக அதிகரிக்க வாய்ப்பு

சென்னை, ஏப். 25

''தமிழகத்தில், கொரோனா தொற்றின் தினசரி பாதிப்பு, அடுத்த மாதத்தில், 19 ஆயிர மாக அதிகரிக்க வாய்ப்புள்ளது,'' என, தேசிய தொற்று நோய் நிலைய துணை இயக்குனர், மருத்துவர் பிரப்தீப் கவுர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு மருத்துவ நிபுணர்கள் குழுவில் இடம் பெற்றுள்ள, இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ் செயல்படும், தேசிய தொற்று நோய் நிலைய துணை இயக்குனர் மருத்துவர் பிரப்தீப் கவுரின், 'டுவிட்டர்' பதிவு:

தமிழகத்தில், 1.3 சதவீதமாக உள்ள, கொரோனா தொற்று மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மே மாதத்தில் தினசரி பாதிப்பு எண்ணிக்கை, 19 ஆயிரத்தை எட்டலாம்.

சென்னையில் கொரோனா தொற்று வேகமாக பரவி வருகிறது. தடுப்பு விதிமுறைகளை பின்பற்றினால், தொற்று பரவல் போக்கை மாற்றலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார். மற்றொரு பதிவில், கொரோனா வைரசை விட, நீங்கள் புத்திசாலி என, நினைக்க வேண்டாம். கொரோனா வைரசிற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியாகி விட்டன.' தடுப்பூசி போடுங்கள்முககவசம்அணியுங்கள்சமூக இடைவெளியை பின்பற்றுங்கள்' எனக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதம்



## விடுதலைப் புலிகளின் அஞ்சலியில் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

*கடந்த 14.03.2021 ஞாயிற்றுக்கிழமை தங்கள் பத்திரிகையின் 5ஆம் பக்கத்தில் வெளியான 'செய்தியின் பின்னணியில்..... காந்தியத்தின் இரு நினைவுகள்' - மாலியின் கட்டுரையில். ஒன்பதாவது பந்தியில்... 'மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் காரிலேயே இருந்தார். தமிழ்ச்செல்வன் அவரிடம் வந்தார்' என்றிருப்பது தவறானது.*

*வவுனியாவில் அஞ்சலி நிகழ்வு நிறைவடைந்த பின், தலைவர் சிவாவின் பூதவுடல் தாங்கிய வண்டியின் பின் ஒரு வானில் நானும், சிவசிதம்பரம் ஐயாவுடைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (சிவிலிலும்), புகைப்பட மற்றும் வீடியோ கலைஞர்களும் சென்றோம். சிறிதுநேரம் கழித்தே கட்சிப் பிரமுகர்கள் வந்தார்கள். விடுதலைப் புலிகள் இடையில் எமது வண்டிகளை மறித்து (கிளிநொச்சிக்கு அண்மையில்), தாங்கள் பேழையைப் பொறுப்பெடுத்து, தமது இராணுவ மரியாதையுடன் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்துக்கு எடுத்துச் சென்று மரியாதை செலுத்தினர்.*

*திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் கட்சித் தலைவர்கள் மற்றும் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மண்டபத்துக்கு வந்து இறுதி அஞ்சலி நிறைவுபெறும்வரை அங்கிருந்தபின், புறப்படும் சமயத்தில் தமிழச்செல்வன் வழியனுப்ப வந்தபோது, "தமிழ் மக்களுக்கு எனது கணவன் தன்னாலானதைச் செய்துமுடித்தார். யார் செய்தாலும், தமிழ் மக்களுக்கு நல்லது நடந்தால் அதுவே போதும்" என்று கூறி விடைபெற்றார்.*

*பாராளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் அவர்களின் செயலாளராக, கொழும்பிலிருந்து அவரின் பூதவுடலோடு கூடவே வந்தவன் என்ற வகையிலும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் பெறாமகன் என்ற முறையிலும், நானே அங்கு பதிவுசெய்த புகைப்படங்களையும் இத்துடன் இணைத்துள்ளேன்.*

**தங்க. முகுந்தன்**
*முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர்*
*தமிழர் விடுதலைக் கூட்டணி*







# கொரோனா தீவிரமடையாதிருக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

*பவித்திரா வன்னியாராச்சி கோரிக்கை*



**கொழும்பு, ஏப். 25**

**இலங்கையில் நாளொன்றுக்கு 1000 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டாலும் சிகிச்சையளிப்பதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.**

எவ்வாறிருப்பினும் நிலைமை அந்தளவிற்கு தீவிரமடையாமலிருப்பதற்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

கொவிட் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்-

கடந்த ஆண்டு இரு தடவைகள் தீவிரமான கொவிட் தொற்று ஏற்பட்ட போதிலும் , மக்களின் முழுமையான ஒத்துழைப்பினால் அதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது.

அதேபோன்று இம்முறையும் மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாரம் நீண்ட விடுமுறை என்பதால் பெருமளவானோர் சுற்றுலா செல்வதற்கு திட்டமிட்டிருக்கலாம்.

தற்போதுள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு அவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போது பரவும் வைரஸ் 14 நாட்களின் பின்னரே அறிகுறிகளை காண்பிக்கிறது. எனவே நாட்டை பாதுகாக்க மிகுந்த பொறுப்புடன் செயற்படுமாறு சகலரிடமும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

# வற்றாப்பளை அம்மன் பொங்கல் இந்த ஆண்டும் கடும் கட்டுப்பாடு

*முல்லைத்தீவு, ஏப். 25*

எதிர்வரும் வைகாசி மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை அம்மன் பொங்கல் நிகழ்வுகளுக்கு கடந்த ஆண்டிலும் பார்க்கக் கூடுதலான கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலர் தெரிவித்துள்ளார்.

வற்றாப்பளை அம்மன் பொங்கல் விழா தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட செயலர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாலில் மாவட்ட, பிரதேச செயலக உயர் அதிகாரிகள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் வற்றாப்பளை அம்மன் ஆலய தலைவர், செலயலாளர், பொருளாளர் உட்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



இதன் போது கருத்துத் தெரிவித்த மாவட்ட செயலர்,

பக்தர்களை மட்டுப்படுத்தும் ரீதியில் நேர்த்திக்கடன் செலுத்த வருகின்றவர்கள் காவடி எடுப்பதற்கு முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. வீதிக் கடைத்தொகுதிகள் தடைசெய்யப்பட்டுள்ளன. சுகாதார ஆலோசனைக்கு அமைவாக கோவிலுக்கு வருபவர்கள் முகக்கவசம் இல்லாமல் வந்தால் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்களை பதிவு செய்யும் நடவடிக்கை முன்னனெடுக்க தீர்மானித்துள்ளோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா குறைவாக இருந்தாலும் வெளி மாவட்டங்களில் பரவல் அதிகரித்துள்ள காரணத்தினால் அங்குள்ளவர்கள் வருவதை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகத்தினர், காட்டாவிநாயகர் ஆலய நிர்வாகத்தினர் ஆலயங்களுக்கு வரும் பக்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பங்கேற்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இருந்தபோதிலும் இவை தொடர்பிலான இறுதித் தீர்மானம் அடுத்த கட்ட சந்திப்பின் போது மேற்கொள்ளப்படும் - என்றார்.

கடந்த ஆண்டில் காவடிகள், விற்பனை நிலையங்கள், தண்ணீர்ப்பந்தல் ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ)

# துறைமுக நகர சட்டமூலத்துக்கு எதிரான 19 மனுக்களின் பரிசீலனை நிறைவடைவு

*கொழும்பு, ஏப். 25*

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்துள்ளது.

குறித்த மனுக்கள் மீதான பரிசீலனை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர் நீதிமன்ற நீதிபதிகளான புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, முர்து பெனாண்டோ, ஜனக் டி சில்வா ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி முதல் 5 நாட்களாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தன.

பாராளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் காணப்படும் சில விடயங்கள் அரசமைப்புக்கு முரணானவை என தீர்ப்பளிக்குமாறு கோரி, தகவல் தொழில்நுட்ப தொழில்வல்லுநர்கள் சங்கத்தின் தலைவரான பொறியாளர் ஜி. கபில ரேணுக பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சி (இரு வெவ்வேறு மனுக்கள்), ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட தரப்பினரால் 19 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைய கடந்த 5 நாட்களாக இடம்பெற்று வந்த குறித்த மனுக்கள் மற்றும் இடையீட்டு மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, உயர்நீதிமன்ற ஐவரடங்கிய நீதிபதிகள் குழாமின் நிலைப்பாடு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ட் சிற்றிக்கு சுயாட்சி கொடுக்கமுடியுமாயின் வடக்கு-கிழக்குக்கு வழங்குவதில் என்ன பிரச்னை?

## கேள்வி எழுப்புகிறார் சித்தார்த்தன் எம்.பி



கொழும்பு, ஏப். 25

**துறைமுக நகரத்துக்கு வழங்கப்படும் சுயாட்சியை வடக்கு, கிழக்குக்கு வழங்கியிருந்தால் எப்பொழுதோ இலங்கையின் மிகப்பெரிய பிரச்னையான இனப்பிரச்னை தீர்ந்திருக்கும் என தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின்படி எப்படியான அதிகாரங்கள் அந்த பகுதிக்கு வழங்கப்படப்போகின்றன என்பது தெளிவாக தெரியவில்லை. ஆனால், கிடைக்கின்ற தகவல்படி, சட்டமூலத்தின் சில பரிந்துரைகளின்படி இது ஆபத்தான ஒரு திட்டம். ஆணைக்குழுவில் உள்ள உறுப்பினர்களாக வெளிநாட்டவர்களையும் நியமிக்க இடமுள்ளது.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர்களை துறைமுக நகரத்துக்கு சீனத் தூதரகம் அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தது. இலங்கைக்குள் உள்ள ஒரு பகுதியை, இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களைக் காண்பிக்க அழைத்து செல்வதென்பது நல்ல விடயமல்ல. ஆரோக்கியமான விடயமுமல்ல.

துறைமுக நகரத்தின் நிர்வாக அதிகாரங்களை சீனாவிடம் வழங்க முடியுமாயின்- இரண்டும் வேறுவேறு என்றாலும்- தமிழ் மக்களின்அரசியல், நிர்வாக உரிமையை வழங்குவதில் என்ன பிரச்சனையென கேட்கிறேன்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை கோரி, எமது பிரதேசத்தில் எம்மை நாமே நிர்வகிக்க கோரி நீண்டகாலமாகப் போராடி வருகிறார்கள். அரசியல், நிர்வாக ரீதியான எம்மை நாமே நிர்வகிக்கும் அதிகாரங்களை கோரி நிற்கிறோம். துறைமுக நகரத்தில் நிர்வாகத்தை சீனாவிடம் வழங்க முடியுமாயின், வடக்கு கிழக்கு நிர்வாக அதிகாரங்களை இந்த நாட்டு பிரஜைகளான தமிழர்களிடம் வழங்குவதில் என்ன பிரச்னை? -என்றார்.

# கையிருப்பில் இருக்கும் தடுப்பூசி போதுமானதல்ல

## லலித் வீரதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 25

இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொண்ட அஸ்ட்ரசெனேகா தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ள போதிலும், அவை எதிர்வரும் யூன் மற்றும் யூலை மாதங்களில் காலவதியாகிவிடும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் கொவிட் தடுப்பூசி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார் .

கொவிட் பரவல் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத்தெரிவித்த அவர்மேலும் கூறுகையில்-

கடந்த ஜனவரி 29 ஆம் திகதி முதல் கொவிட் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதோடு இதுவரை 9 இலட்சத்து 25 242 பேருக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்குவதற்கு தற்போது கையிருப்பில் உள்ள அஸ்ட்ரசெனேகா தடுப்பூசிகள் போதுமானதல்ல. இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையால் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதில் சற்று கால தாமதம் ஏற்பட்டுள்ளதோடு அஸ்ட்ரசெனேகா மாத்திரமின்றி சீனோபார்ம், ஸ்புட்னிக் பைசர் உள்ளிட்டவை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது-என்றார்.

# சுகாதாரம் பின்பற்ற தவறும் பள்ளிவாசல்கள் மூடப்படும்!

## வக்பு சபை தீர்மானம்

கொழும்பு, ஏப். 25

இலங்கையில் கொரோனாத் தொற்று பரம்பல் திடீரென அதிகரித்து வரும் நிலையில் சுகாதார வழிமுறைகளை பின்பற்ற தவறும் பள்ளிவாசல்களை நோன்பு காலம் நிறைவு வரை மூடப்படுவதற்கு வக்பு சபை தீர்மானித்துள்ளது.

கொவிட் 19 செயலணி மற்றும் சுகாதார அமைச்சு வழங்கியுள்ள சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறும் பள்ளிவாசல்களை நோன்பு முடியும்வரை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் அநேகமான பள்ளிவாசல்களில் கொவிட் 19 தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுவதாகவும் பெரும் எண்ணிக்கையானோர் பள்ளிவாசல்களுக்குள் சுகாதார வழிகாட்டல்களை அசட்டை செய்வதாகவும் வக்பு சபைக்கு ஆதாரங்களுடன் முறைபாடுகளை முன்வைத்திருப்பதனாலேயே இவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதாக வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்துள்ளார்.

வக்பு சபையின் தலைவர் சப்ரி ஹலீம்தீன் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் சுகாதார அமைச்சு நோன்பு காலத்தில் பள்ளிவாசல்களில் சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் சுற்றிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அவ்வறிக்கையில் பள்ளிவாசல்களில் ஜமாஅத் தொழுகைகளில் 100 பேருக்கு உட்பட்டவர்களே தொழமுடியும். ஒவ்வொருவரும் வீட்டிலிருந்து முஸல்லாக்களை எடுத்து வர வேண்டும். வீடுகளிலே வுழூச் செய்து வரவேண்டும். ஒவ்வொருவரும் மாஸ்க் அணிந்திருக்க வேண்டும்.ஒரு மீற்றர் இடைவெளி பேணப்பட வேண்டும். பள்ளிவாசலுக்குள் நுழையும் ஒவ்வொருவரதும் உடல் உஷ்ண நிலை சோதிக்கப்பட வேண்டும் என்பன உட்பட பல நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் இவைகளில் எவையும் பின் பற்றப்படுவதில்லை என வக்பு சபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கஞ்சி விவகாரமும் சுற்றறிக்கையின்படி பேணப்படுவதில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கஞ்சி பள்ளிவாசலுக்கு வெளியே வழங்கப்படவேண்டுமென சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரமும் பின்பற்றப்படாது அலட்சியம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரங்கள் புகைப்படங்கள் மூலம் வக்பு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் நாட்டில் கொவிட் 19 மூன்றாவது அலை உருவாக முஸ்லிம் சமூகம் காரணமாக இருந்தது என்ற குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்படலாம். அதனால் பள்ளிவாசல்கள் நோன்பு காலத்தில் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை முழுமையாக கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். பள்ளிவாசல்களில் சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுகின்றமைக்கு பள்ளிவாசல் நிர்வாகங்களே பொறுப்புக் கூறவேண்டும்-என்றார்.

# பாராளுமன்ற அமர்வுக்கு 1 நிமிட செலவு ரூ. 100,000

கொழும்பு, ஏப். 25

பாராளுமன்ற அமர்வின் ஒவ்வொரு நிமிடத்துக்கும் சுமார் ரூபா 100,000 செலவிடப்படுகிறது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தொடர்பாக எழுந்த வாதங்களைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட சபாநாயகர், ஒத்திவைப்பு வேளை விவாத நாள் ஆரம்பித்து 47 நிமிடங்கள் கடந்துவிட்டதாகவும், ரஞ்சித் மத்தும பண்டார தலைப்பில் இருந்து விலகி வருகிறார் என்றும் தெரிவித்தார்.

" தேவையற்ற வாதத்தால் ரூ .4.7 மில்லியன் பொது நிதி வீணடிக்கப்பட்டது, "என்று சபாநாயகர் கூறினார்.

# இலங்கை உள்ளிட்ட 5 ஆசிய நாடுகளிலுள்ள சவுதியர்களை உடன் நாடு திரும்ப அறிவித்தல்

கொழும்பு, ஏப். 25

இலங்கை உள்ளிட்ட ஐந்து நான்கு ஆசிய நாடுகளில் வசிக்கும் சவுதி குடிமக்களை விரைவில் நாடு திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

அந்த செய்திகளின்படி,

அடுத்த மாதம் சர்வதேச விமான சேவைகளை மீண்டும் தொடங்க சவுதி முடிவு செய்தாலும் இந்த நாடுகளில் இருந்து எந்த விமான சேவைகளும் இடம்பெறாது என்பதால் சவுதி குடிமக்களை நாடு திரும்புமாறு கூறப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் வசிக்கும் சவுதி பிரஜைகளுக்கே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்ததை தொடர்ந்த் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு சிவில் விமானசேவைகள் அதிகாரசபை வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் பழிவாங்கல் விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு எதிராக கடும் குற்றச்சாட்டுக்கள்

## சபையில் சுட்டிக்காட்டினார் அனுரகுமார திஸநாயக்க

கொழும்பு, ஏப். 25


அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களிற்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்கள் உள்ளதை ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸநாயக்க பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

அரசியல் பழிவாங்கல் குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அனுரகுமார,

ஆணைக்குழுவில் ஊழல் நிறைந்த நபர்கள் உள்ளனர், இதனால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சவால்விடும்உரிமை அவர்களுக்கு இல்லை என்று கூறினார்.

இந்த விடயத்தை மிகவும் ஒழுங்கான முறையில் கையாள வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிமன்ற தீர்ப்புகள்குறித்த முடிவுகள் பாராளுமன்றத்தில் அல்லது அமைச்சரவையில் கை காண்பிப்பதன்மூலம்எடுக்கப்பட்டால் நீதித்துறை அவசியமா என்று அவர் கேள்வி எழுப்பினார்.



இதுவரை 78 நீதிமன்ற வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாலையில் வீட்டில் வைத்து

# ரிஷாத் பதியுதீன் மீண்டும் கைது!

**கொழும்பு, ஏப். 25**
**பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப் பட்டுள்ளது.**
**குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் ரிஷாத் பதியுதீன் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.**

இதேவேளை, ரிஷாத் பதியுதீனின் சகோதரரான ரிஜாய் பதியுதீனும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

முன்னதாக நேற்று அதிகாலை 1.30 மணியளவில் ரிஷாத் பதியுதீன் தன்னுடைய டுவிட்டரில் இது குறித்த பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

"குற்றவியல் விசாரணைப் பிரிவு இன்று(நேற்று) அதிகாலை 1.30 மணி முதல் பௌத்தலோக மாவத்தையில் உள்ள எனது வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருக்கிறது. அவர்கள் ஏற்கனவே எனது சகோதரரை கைது செய்துள்ளனர். நான் பாராளுமன்றத்தில் இருந்தேன், இப்போது வரை அனைத்து சட்டபூர்வ அதிகாரிகளுக்கும் ஒத்துழைத்துள்ளேன். இது அநியாயம். " என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# பாராளுமன்ற செயற்பாட்டில் கடைசி 10 இடங்களில் தமிழ் எம்.பிக்கள் சம்பந்தன், பிள்ளையான், திலீபன்

கொழும்பு, ஏப். 25
தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களில், பாராளுமன்றத்தில் மிகக் குறைவான செயல்திறனை வெளிப்படுத்தும் பத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையமான Manthri.lk நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது

பொதுஜன பெரமுனவை சேர்ந்த ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் 2 பாராளுமன்ற உறுப்பினர்களும், இலங்கை தமிழ் அரசு கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியவற்றின் தலா ஒவ்வொரு எம். பிக்களும் "பாராளுமன்றத் தில் செயல்படாத" உறுப்பினர்களாக பட்டியலிடப்பட்டுள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), ஈ.பி.டி.பியின் கு.திலீபன், பொதுஜன பெரமுனவின் கருணாதாச கொடித்துவக்கு, நிபுண ரணவக்க, மர்ஜன் பளீல், ஜனக பண்டார தென்னக்கோன், டிரான் அலஸ் ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.எஸ். தௌபீக் மற்றும் அலி சப்ரி ரஹீம் ஆகியோருமே பாராளுமன்ற செயற்பாட்டில் கடைசி இடங்களை பிடித்துள்ளனர்.

பாராளுமன்ற வரவு, உரையாற்றுவது, விவாதங்களில் கலந்து கொள்வதன் அடிப்படையில் உறுப்பினர்களின் செயற்பாட்டு தரம் தீர்மானிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# திருமலை வருவதை தவிர்க்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அறிவுரை

திருமலை, ஏப். 25
கொரோனா வைரஸ் தொற்று பரவும் அபாயத்தை சுகாதாரத் துறை அடையாளம் கண்டுள்ளதால் திருகோணமலை மாவட்டத்துக்கு வருவதைத் தவிர்க்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பொதுமக்களிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

வீதித் தடைகளைத் தவிர்த்து பிற நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் குறைக்குமாறு ஆளுநர் பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, திருகோணமலையில் விசேட பாதுகாப்புத் திட்டத்தை எதிர்காலத்தில் செயற்படுத்துமாறும் பாதுகாப்புப் படையினரிடம் ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் அனைவர் தொடர்பிலும் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்துமாறும் ஆளுநர், பாதுகாப்பு படையினருக்கு இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் சிறுநீரக நோயாளிகள் பதிவாகியுள்ள கோமரங்கடவல மற்றும் பதவிஸ்ரீபுர பகுதிகளில் இருந்து திருகோணமலைக்கு வருபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.



சிறுநீரக நோயாளிகளுக்குக் கொரோனாத் தொற்றுப் பரவல் மிக வேகமாக இருப்பதை சுகாதாரத் துறை வெளிப்படுத்தியுள்ளதால் ஆளுநர் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

(அ)

# காற்றில் பரவும் புதிய வகை கொரோனா அதிகம் இளம் வயதினரைத் தாக்குகிறது!

கொழும்பு, ஏப். 25
இலங்கையில் அண்மைக் காலங்களில் அதிகளவான இளம் வயதினர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு வருவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசெல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்பு மூலம் மட்டுமே மட்டுமன்றி, தற்போது காற்றில் புதிய வகை கொரோனா வைரஸ் பரவுகிறது எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட மருத்துவர் அசெல குணவர்தன, தற்போது இலங்கையில் பரவும் கொரோனா வைரஸின் புதிய வகை முதியவர்களை மட்டுமன்றி, இளையோரையும் அதிகம் பாதிப்பது கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இளையவர்களிடையே வைரஸ் வேகமாகப் பரவும் நிலையில் இள வயதினருக்கு ரஷ்யாவின் 'ஸ்பூட்னிக் வி' தடுப்பூசியைப் போட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இளம் வயதினருக்கு 'ஸ்பூட்னிக் வி' தடுப்பூசி மற்றும் பைசர் தடுப்பூசிகளைப் பயன்படுத்த முடியும் என சுகாதார அதிகாரிகளின் சுட்டிக்காட்டுகின்றனர்.

'ஸ்பூட்னிக் வி' தடுப்பூசி மற்றும் பைசர் தடுப்பூசி பெற்றுக்கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தற்போது இலங்கை ஈடுபட்டு வருகிறது.

இதேவேளை, கொரோனா வைரஸின் புதிய பிறழ்வுகள் இலங்கைக்குள் பரவி வருகின்றன. அந்த பிறழ்வுகள் எந்த வகையைச் சேர்ந்தவை? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு அறிவியல் துறை பேராசிரியர் நீலிகா மலாவிஜ் தெரிவித்துள்ளார்.

புதிய வகை வைரஸ் மிக வேகமாகப் பரவக்கூடியது. முன்னர் பரவிய வைரஸ் ஒருவரிடம் இருந்து ஒன்று அல்லது இரண்டு நபர்களுக்குத் தொற்றக்கூடியது. ஆனால் தற்போது பரவும் புதிய வைரஸ் 5 முதல் 6 பேர் வரையில் தொற்றை ஏற்படுத்தும் எனவும் அவர் கூறினார்.

புதிய வகை வைரஸ் சிறிய நீர்த்துளிகள் ஊடாக காற்றில் பரவுகின்றது. இதனால் நேரடித் தொடர்பு ஊடாக மட்டுமன்றி நோயாளி இருக்கும் இடத்தில் உள்ளவர்களுக்கு இந்த வைரஸ் பரவுகிறது எனவும் பேராசிரியர் நீலிகா மலாவிஜ் விளக்க மளித்தார்.

# பணி முடிந்து திரும்பிய பெண்ணை துரத்திச் சென்ற கும்பல் அட்டகாசம்

## ஆனைக்கோட்டையில் மோ.சைக்கிள் தீ வைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ். நகரில் பணி முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த இளம் பெண்ணை துரத்திச் சென்ற கும்பல் ஆனைக்கோட்டைப் பகுதியில் வைத்து அவர் பயணித்த மோட்டார் சைக்கிளை தீ வைத்து சென்றுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் ஹாட் வெயார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் இளம் பெண்ணின் மோட்டார் சைக்கிளே கும்பல் ஒன்றினால் எரியூட்டப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை பகுதியில் வைத்து இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த 24 வயதுடைய இளம் பெண் வேலை முடித்து வீடு திரும்பியபோது பின் தொடர்ந்து சென்ற மூவர் அடங்கிய கும்பல் அவரை வழிமறித்து தடுத்துள்ளது.

அவர்களிடமிருந்து தப்பிக்க மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு வீடொன்றுக்குள் இளம் பெண் சென்றபோதே மோட்டார் சைக்கிளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# ஏ.எல். பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரத்துக்குள் வரும்

கொழும்பு, ஏப். 25
கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரத்திற்குள் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை பெறுபேறுகளை தயார்ப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவுக்கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ. பூஜித தெரிவித்தார்.

இதனிடையே, கடந்த மார்ச் மாதத்தில் நடைபெற்ற கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை 23 நிலையங்களில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. 4,620 ஆசிரியர்கள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடைபெற்றது.

(அ)

# சாவகச்சேரி நகரசபைக்குள் 11 வீதிகளுக்கு காப்பெட்

யாழ்ப்பாணம், ஏப். 25
அரசாங்கத்தின் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இரண்டாம் கட்டமாக 15 கிலோமீற்றர் நீளம் கொண்ட பதினொரு வீதிகள் காப்பெற் வீதிகளாக செப்பனிடுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட வீதிகளின் விவரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் சாவகச்சேரி நகரசபைக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சங்கத்தானை-சப்பச்சி மாவடி வீதி, சோலை அம்மன் வீதி, பங்களா வீதி, ஆசிரியர் வீதி, சித்தன்மாவடி வீதி, கார்த்திகேசு வீதி, ஆடியம்பிட்டி வீதி,சண்முகம் வீதி,பத்தினியார் துரவு வீதி, தம்பு தோட்டம் வீதி மற்றும் பெருங்குளம் - சங்கத்தானை வீதி ஆகிய பதினொரு வீதிகளே இவ்வாறு புனரமைப்பிற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கொரோனா வைரஸ்:

# ஒட்சிசன் இல்லாமல் தடுமாறும் டில்லி மருத்துவமனைகள்!




**"டில்லியின் பிரபலமான சர் கங்கா ராம் மருத்துவமனையில் கடந்த 24 மணி நேரத்தில் 25 நோயாளிகள் இறந்திருக்கிறார்கள். அடுத்த சில மணி நேரத்துக்கு மட்டுமே ஒட்சிசன் கையிருப்பு உள்ளது என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கிறது.**

**60 நோயாளிகளின் உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதாகவும், உடனடியாக ஒட்சிசன் வேண்டும் எனவும் அந்த மருத்துவமனை யின் இயக்குநர் குறிப்பிட்டதாக ஏ.என்.ஐ செய்தி முகமையில் செய்தி வெளியானது."**



கொரோனா வைரஸின் இரண்டாம் அலை இந்தியாவையே உலுக்கிக் கொண்டிருக்கிறது. நேற்று முன் தினம் ஒரே நாளில் 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதே போல கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கையும் 2,100 ஐ கடந்திருக்கிறது.

குறிப்பாக மகாராஷ்டிரம், டில்லி, கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் நிலைமை மோசமாகிக் கொண்டே இருக்கின்றன. அதிலும் குறிப்பாக தலைநகரான டெல்லியில் நிலையை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை எனலாம்.

டில்லியின் பிரபலமான சர் கங்கா ராம் மருத்துவமனையில் கடந்த 24 மணி நேரத்தில் 25 நோயாளிகள் இறந்திருக்கிறார்கள். அடுத்த சில மணி நேரத்துக்கு மட்டுமே ஒட்சிசன் கையிருப்பு உள்ளது என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கிறது.

60 நோயாளிகளின் உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதாகவும், உடனடியாக ஒட்சிசன் வேண்டும் எனவும் அந்த மருத்துவமனையின் இயக்குநர் குறிப்பிட்டதாக ஏ.என்.ஐ செய்தி முகமையில் செய்தி வெளியானது.

அதே போல டில்லியின் மற்றொரு பெரிய மருத்துவமனையான மக்ஸ் மருத்துவமனையும் ஒட்சிசன் இல்லாமல் தவிப்பதாக தன் டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறது.

மக்ஸ் ஸ்மார்ட் மற்றும் மேஸ் மருத்துவமனை சாகேத்தில் ஒரு மணி நேரத்துக்கும் குறைவான ஒட்சிசன் மட்டுமே கையில் இருப்பதாகவும், அதிகாலை ஒரு மணி முதல் ஒட்சிசனுக்காக காத்திருப்பதாகவும், டில்லி முதல்வர், டில்லி துணை முதல்வர், பிதமர், மத்திய சுகாதார அமைச்சர் என அனைவரையும் ரக் செய்து உதவி கேட்டு தன் டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தது.

700 க்கும் மேற்பட்ட நோயாளிகள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் உடனடி உதவி வேண்டும் எனவும் அப்பதிவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

"டில்லிக்கு ஒட்சிசன் தருமாறு இருகரம் கூப்பி மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்" என கடந்த ஏப்ரல் 20ஆம் திகதியே டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பது நினைவுகூரத்தக்கது.

டில்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள என்.சி.ஆர் பகுதிகளில் இருக்கும் பெரு நிறுவன மருத்துவமனைகள் எப்படியோ அடித்துப் பிடித்து நோயாளிகளுக்கு ஒட்சிசனை வாங்கிக் கொடுத்து தற்காலிகமாக நிலைமையை சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் சிறிய மருத்துவமனைகளால், அப்படி அரசிடம் முறையிட்டு ஒட்சிசனை வாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதாக ரைம்ஸ் ஒப் இந்தியாவில் செய்திகள் வெளியாகியுள்ளன.

உதாரணத்துக்கு கர்கர்டூமாவில் இருக்கும் சாந்தி முகுந்த் மருத்துவமனையில் போதிய அளவு ஒட்சிசன் இல்லாததால், புதிதாக நோயாளிகளைச் சேர்த்துக் கொள்வதை நிறுத்தி வைத்துள்ளதாகவும், மருத்துவ மனையில் இருக்கும் நோயாளிகளை ஒட்சிசனுக்கு ஏற்பாடு செய்யவோ அல்லது நோயாளிகளை வீட் டுக்குச் செல்லவோ அறிவுறுத்துவதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அம்பேத்கர் நகர், ராஜிவ் காந்தி சூப்பர் ஸ்பெஷாலிட்டி, தீப் சந்த் பந்து, ஜிடிபி, புராரி, தீன் தயால் உபாத்யாய், டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர் போன்ற அரசு மருத்துவ மனைகளில் ஒரு சில மணி நேரங்கள் தொடங்கி அதிகபட் சமாக ஒரு நாளுக்கான ஒட்சிசன் மட்டுமே கையில் இருப்பதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



சர் கங்காராம், மக்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி, செயின்ட் ஸ்டீபன், வெங்கடேஷ்வர், ஸ்ரீ பாலாஜி ஆக்ஷன் மெடிக்கல் இன்ஸ்டிட்யூட், இந்திரப் பிரஸ்தா அப்பல்லோ போன்ற தனியார் மருத்துவமனைகளில் ஒரு சில மணி நேரங்கள் தொடங்கி அதிகபட்சமாக 20 மணி நேரத்துக்கான ஒட்சிசன் மட்டுமே கையிருப்பு உள்ளதாக அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ரதி, சாந்தோம், சரோஜ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி, தீரத் ராம் ஷா போன்ற தனியார் மருத்துவமனைகளில் ஒட்சிசன் தீர்ந்துவிட்டதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒட்சிசனுக்கான தேவை அசுர வேகத்தில் அதிகரித்துக் கொண்டிருக் கும்போது, ஒரு சில மணி நேரங்களுக்கு மட்டுமே போதுமான ஒட்சிசன்கள் விநியோகிக் கப்பட்டு வருகின்றன.

சேர் கங்காராம் மருத்துவமனைக்கு ஒட்சிசன் கிடைத்துவிட்டதாக நேற்று காலை ஏ என் ஐ செய்தி முகமையில் செய்தி வெளியாகியுள்ளது.

மாநில அரசிடமிருந்து தடையில்லா சான்றிதழ் வாங்கிய பின், இந்த மருத்துவமனைக்கு ஐநாக்ஸ் நிறுவனம் 9,000 - 10,000 க்யுபிக் மீற்றர் ஒட்சிசன் விநியோகிக்க இருப்பதாக சேர் கங்காராம் மருத்துவ மனையின் தலைவர் கூறியுள்ளார். அதோடு ஒட்சிசன் போதாக்குறையால் யாரையும் இறக்க விடவில்லை எனவும் விளக்கமளித்துள்ளார்.

அதே போல மேக்ஸ் சாகேத் மற்றும் மக்ஸ் ஸ்மார்ட் மருத்துவமனைகளுக்கு ஒட்சிசன் கிடைத்துவிட்டதாக டுவிட்டரில் மக்ஸ் மருத்துவமனையே பதிவிட்டுள்ளது. ஆனால் அதை வைத்துக் கொண்டு அடுத்த 2 மணி நேரத்தை மட்டுமே சமாளிக்க முடியும் எனவும் அப்பதிவில் கூறியுள்ளது. இன்னும் நிறைய ஒட்சிசன் வேண்டும் எனவும் கூறியுள்ளது.

தலைநகருக்கு ஒட்சிசன் விநியோகிக்க பல்வேறு வழிகளில் மத்திய அரசு நட வடிக்கை எடுத்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

**- பி.பி.சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையாட்களையும் அடிவருடிகளையும் காப்பாற்ற

# அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளால் அதல பாதாளத்துக்குள் இலங்கை!

கையாட்களையும் அடிவருடிகளையும் காப்பாற்ற அரசு எடுத்திருக்கும் கேள்விக்கிடமான இந்த நடவடிக்கைகள் அல்லவா இலங்கையை அதல பாதாளத்துக்குள் தள்ளுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் முழு வடிவம் இது.

மதிப்பு சார்ந்த பொதுச் சேவைக்குள் அரசியலா னது புக இடமளித்த காலம் தொடக்கம் பதவியில் உள்ளோரின் பழிவாங்கல் குணம் பற்றியும் தம்மவர் நலம் பேணும் தன்மை பற்றியும் எதிர்த்தரப்பார் கூறுவதும் அதன்பின் எதிர்த் தரப்பார் பதவிக்கு வந்தவுடன் தம்முடைய ஆதரவாளர்கள் முன்னைய அரசால் பழிவாங்கப்பட்டார்கள் என்று கூறுவதும் சகஜமாகிவிட்டது. ஆனால் பின்னர் பதவிக்கு வருபவர்கள் தாங்களும் பொதுச் சேவையில் இருக் கும் தமது ஆதரவாளர்களின் நலன்களைப் பேணும் வண்ணமே நடந்து கொள்வார்கள்.

இவ்வாறான நாசகரமான பழக்கமானது பொதுச் சேவைக்குள் அரசியல் ஊடுருவியதாலேயே ஏற்பட்டது.

பாராளுமன்றமோ அரசியல்வாதிகளோ பொதுச் சேவையின் செயற்பாடுகளில் தலையிடக் கூடாது. அவ்வாறு செய்வது அரசியல் யாப்பின் 4ஆம் உறுப்புரையில் காணப்படும் 'அதிகாரப் பிரிவினை' (Separation of Powers) என்ற கோட்பாட்டை மீறுவதாக அமையும். நிறைவேற்றுத் துறையின் ஒரு அங்கமே பொதுச் சேவை. எனினும் அத்துறையின் மற்றைய அங்கத்தவர்களான ஜனாதிபதியும் அமைச்சரவையும் பொதுச் சேவை மீது வரையறுக்கப்பட்ட அதிகாரமே கொண்டுள்ளனர்.

எமது அரசியல் யாப்பானது நிறைவேற்றுத் துறை பற்றி மூன்று அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. அவையாவன VII, VIII, IX Mtd. IXவது அத்தியாயமே பொதுச் சேவை பற்றி விவரிக்கின்றது. அமைச்சரவைக்கு பொதுச் சேவை மேல் இருக்கும் ஒரேயொரு அதிகாரமானது கொள்கை பாற்பட்டதே. அரசியல் யாப்பின் உறுப்புரை 55(4) பின்வருமாறு கூறுகின்றது.

'அரசியல் யாப்பின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவையானது கொள்கை பாற்பட்ட சகல விடயங்களையும் அவை பற்றிய தீர்மானங்களையும் பொது அலுவலர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்'.

அரசியல் யாப்பானது காரணத்துடன் தான் ஜனாதிபதியையோ அமைச்சரவையையோ பொதுச் சேவையின் செயற்பாடுகளில் ஊடுருவ இடமளிக்காது விட்டுள்ளது. அமைச்சரவை கொள்கையளவிலான அறிவுரைகளை வழங்கலாம். உதாரணமாக யார் யாருக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பத்திரம் பதிய வேண்டும் என்பதை அமைச்சரவை தீர்மானிக்க முடியாது. அதற்கான உரித்து சட்டத்துறைத் தலைமையதிபதியை மட்டுமே சாரும்.

இதற்காகத் தானோ என்னவோ ஜனாதிபதி அவர்கள் வேறு பல நிறுவனங்களை உள்ளேற்றாலும் சட்டத்துறைத் தலைமை அதிபதியை மேற்படி ஆணைக்குழுவுடன் சேர்க்கவில்லை. ஆணைக்குழு தான்தோன்றித்தனமாக வழக்குத் தொடுப்பவர்களையும் வருத்தத் தொடங்கியிருப்பது வியப்பைத் தருகின்றது.

அமைச்சரவையானது தனது நடவடிக்கைகள் சம்பந்தமாக பாராளுமன்றத்துக்கே பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. அமைச்சரவை கொள்கை ரீதியான நெறிப்படுத்தலை மட்டுமே பொதுச் சேவைக்கு அளிக்க முடியும் என்று இருக்கும் போது பாராளுமன்றம் எதனை மேலதிகமாக பொதுச் சேவை சம்பந்தமாகச் செய்ய முடியும்? பாராளுமன்றம் அமைச்சரவையின் கொள்கைகள் பற்றி மட்டுமே கேள்விகள் எழுப்பலாம். ஆனால் பாராளுமன்றம் அரசியல் பழிவாங்கலைக் கட்டுப்படுத்த தகுந்த சட்டங்களை நிறைவேற்ற முடியும்.

ஆனால் பாராளுமன்றம் தனிப்பட்டவர்கள் சம்பந்தமாக பொதுச் சேவையினரை நெறிப்படுத்த முடியாது. அப்படிச் செய்தால் அத்தகைய செயல் அரசியல் யாப்பின் உறுப்புரைகள் 4 மற்றும் 55 ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைந்து விடும்.

நான் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த போது சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க பல வழக்குகளில் என்முன் தெரிபட்டுள்ளார். அவர் நேற்று, பசில் ராஜபக்ஷ போன்றவர்களுடன் சேர்ந்த அவரின் கட்சிக்காரர்களுக்கு சென்ற அரசாங்கம் காலத்தில் என்ன நடந்தது என்பது பற்றி நடிப்பது போலவும் விலாவாரியாகவும் பலதையும் எடுத்துக் கூறினார்.

ஆனால் தனிப்பட்டவர்களோ அவர்களின் சட்டத்தரணிகளோ சாட்சியங்கள் அவர்களுக்கெதிராகப் புனையப்பட்டுள்ளன என்றோ அல்லது அரசியல் ரீதியாகப் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றோ கண்டால் நீதித்துறையூடாக உரிய நிவாரணங்கள் பெற பல வழிகள் உண்டு. முதலாவதாக அதே வழக்கில் அம்மன்றத்தில் ஆட்சேபணைகளைத் தெரிவித்துக் கொள்ளலாம். இரண்டாவதாக அரசியல் யாப்பின் உறுப்புரை 126ன் கீழ் தமது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கூறி உச்ச நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். மேலும் உறுப்புரை 140 இன் படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தடையாணைகள் எவற்றையேனும் பெற்றுக் கொள்ளலாம். அது மட்டுமல்ல! குரோத எண்ணமுடன் பொய் வழக்குப் பதியப்பட்டது என்று வழக்குப் பதிந்து நட்ட ஈடு பெற்றுக் கொள்ளலாம்.

நீதித்துறையின் கீழான நியாயாதிக்க எல்லைகள் பரந்து கிடக்கின்றபடியால் அநியாயம் நடப்பதைத் தடை செய்து நட்ட ஈடும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே தனிநபர்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்க நிறைவேற்றுத் துறைக்கோ சட்டவாக்கத்துறைக்கோ எந்த அதிகாரமும் இல்லை. தனிநபர்கள் தமது குறைகளைத் தீர்க்க நீதித்துறையையே நாடவேண்டும்.



முன்னைய அரசாங்கம் ஒன்றினால் நடத்தப்பட்ட அரசியல் பழிவாங்கல்களுக்கு விசேட ஆணைக்குழுக்களையும் குழுக்களையும் நாடலாம் என்று கருதுவது சட்டவாட்சிக் கொள்கைக்கு (Rule of Law) முரணானது. உறுப்புரை 126இன் கீழ் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமில்லை. அரசியல் யாப்பின் உறுப்புரை 126(1) பின்வருமாறு கூறுகின்றது. 'அத்தியாயம் III அல்லது அத்தியாயம் IV ன் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை நிறைவேற்றுத் துறையின் நிர்வாக நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டால் அல்லது பாதிக்கப்படும் ஆபத்தில் இருந்தால் அவற்றை ஆராய்ந்தறியும் பிரத்தியேகமானதும் தனிப்பட்டதுமான அதிகாரம் உச்ச நீதிமன்றத்தையே சாரும்'.

ஆகவே மேற்படி பொதுச் சேவை அலுவலர்கள், அரசகூட்டுத்தாபன ஊழியர்கள், அரச படையினர் மற்றும் பொலிஸ் சேவையில் இருந்தோர் சம்பந்தமான அரசியல் பழிவாங்கல்களை ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்திற்குப் புறம்பானது என்பதே எனது கருத்து. பொதுச் சேவை தனது கடமைகளைப் பக்கச் சார்பின்றி ஆற்ற இடமளிக்க வேண்டும். அவர்கள் பதவியுள்ளோரின் மனங்களைக் கவர தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர்.

நேற்றைய தினம் சரத் பொன்சேகாவால் பிஸ்சு பூசா ஆணைக்குழு என்று அழைக்கப்பட்ட இந்த ஆணைக்குழு சட்டத்திற்குப் புறம்பாக நியமிக்கப்பட்டதெனின் அவ்வாறான ஆணைக்குழு அறிவுள்ளோர் காலடி எடுத்து வைக்க விரும்பாத இடங்களுக்குள் எல்லாம் மகிழ்வுடன் காலடி எடுத்து வைத்துள்ளது.

ஆணைக்குழுவால் ஆராயப்பட்ட பல வழக்குகள் முடிவுறாமல் இன்றும் நடப்பில் இருந்து வருகின்றன. ஆணைக்குழுவானது அரசியல் யாப்பின் உறுப்புரை 105னால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு அமைப்பல்ல. அதாவது நீதி நிர்வாகத்திற்காகச் சட்டப்படி நியமிக்கப்பட்ட ஒரு நிறுவனம் அல்ல. ஆகவே நீதித்துறைக்கு ஏற்புடைத்தான விடயங்களுக்கு எதிர்மாறாக இயற்றப்பட்ட ஒருஅமைப்பே அது.

முடிவுறாமல் நீதிமன்றங்களில் இருக்கும் வழக்குகள் சம்பந்தமாக ஆணைக்குழு எடுக்கும் சகல நடவடிக்கைகளும் நீதித்துறையின் செயற்பாடுகளில் ஊடுறுவல் செய்யும் நடவடிக்கைகளாகவே கருதப்படுவன. அவ்வாறான ஊடுறுவல் அரசியல் யாப்பின் உறுப்புரை IIIC என்பதின் ஏற்பாடுகளுக்கு முரணானவை. அவ்வுறுப்புரையின்படி நீதித்துறையின் நடவடிக்கைகளுள் ஊடுறுவல் செய்யும் விதத்தில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அது அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின் படி ஒரு தண்டிக்கப்பட வேண்டிய குற்றச் செயலாகும். இந்த விவாத முடிவில் மேற்படி ஆணைக்குழுவின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானம் எடுத்தால் இந்த உயரிய பாராளுமன்றமும் உறுப்புரை IIIC ன் கீழ் குற்றம் இழைத்ததாகவே கருதப்படும். அதனால்தான் போலும் இந்த விவாதம் பற்றிய பிரேரணையில் தவறுகள் இருந்தாலும் விவாதத்தை அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படவில்லை.

இதனால்தான் இவ்வாணைக்குழுவை உருவாக்கிய 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானி இலக்கம் 2157/44 ல் (இறுதிப் பந்திக்கு முந்திய பந்தியில்) மேற்படி ஆணைக்குழுவால் அதன் குறிக்கோள்கள் சம்பந்தமாக எடுக்கப் போகும் நடவடிக்கைகள் ஏற்கனவே நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கோ எடுக்கப்படப் போகும் நடவடிக்கைகளுக்கோ பாதிப்பில்லாமல் அவற்றிற்கு அப்பால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆவன என்று கூறப்பட்டுள்ளது. 'பாதிப்பில்லாமல்' என்று கூறும் போது ஆணைக்குழுவின் புதிய நடவடிக்கைகள் தற்போது நடைமுறையில் இருந்து வரும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பாதிக்க மாட்டா என்று அர்த்தப்படும். அப்படியானால் நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட பல தீர்மானங்களைப் புறந் தள்ளும் விதத்தில் ஆணைக்குழு செயற்பட்டதன் அர்த்தம் என்ன? ஆணைக்குழு தான் எடுத்திருக்கும் நடவடிக்கைகளின் தாற்பரியத்தை அறியாது இருப்பது விந்தையேயாகும்.

இவ்வளவும் கூறிய பின், இன்னொரு கோணத்தில் இருந்தும் இதைப் பார்க்கின்றேன். தற்போது இந்த நாட்டில் நடக்கும் செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கும், சட்டவாச்சிக்கும், பொதுச் சேவையினதும் நீதித்துறையினதும் சுதந்திரச் செயற்பாடுகளுக்கும் சாவு மணி அடிப்பது போல் இருந்தாலும் மாறி மாறி வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்களினால் பாதிப்புற்று இதுவரையில் நீதி பெறாமல் இருக்கும் தமிழ் மக்களுக்கு இந்த ஆணைக்குழுவின் நியமனமும் அதன் செயற்பாடுகளும் அதன் அறிக்கை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதும் ஒரு முரணான சிந்திப்பின் அடிப்படையில் வரவேற்கத் தக்கதாகும். அதாவது வரவேற்பதன் அர்த்தம் என்னவென்றால் ஜெனிவாவில் தமிழர் சார்பான தரப்பினரால் கூறிய அதே விடயங்கள் இந்த நடவடிக்கைகளால் ருசுப்படுத்தப்பட்டுள்ளன. நீதியின் பயணத்தை இலங்கை அரசாங்கம் எவ்வாறு தவறான வழியில் திசை திருப்புகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம் ஆகும். தமிழர்கள் இதுகாறும் கூறி வந்தனவற்றிற்கு இந்த நடவடிக்கைகள் ஒரு உதாரணம் போல் அமைந்துள்ளது. நாம் என்ன கூறினோம்? நீதியானது தனது தூய பாதையில் பயணஞ் செய்ய இலங்கை அரசாங்கம் இடமளிக்கும் என்று எஞ்ஞான்றும் நாம் நம்ப முடியாது என்றோம். இதனால்த்தான் தமிழர்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகியன ஒரு சர்வதேச நியாமன்றை உருவாக்குங்கள் என்று கேட்டிருக்கின்றார்கள்.

ஊழல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நபர்கள் மீது விசாரணை நடத்தவிடாமல் தடுக்கும் அரசாங்கம் போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்கும் என்று எவ்வாறு நம்பலாம்? இலங்கைக்கெதிராக செயற்படுகின்றார்கள் என்று எமது புலம்பெயர் உறவுகளையும், அரசசார்பற்ற அமைப்புக்களையும் மேற்குலகையும் கண்டிக்கும் அரச தரப்பில் இருக்கும் நீங்கள் தற்போது நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதைக் கூர்ந்து அவதானிக்கவேண்டும். உங்களுடைய கையாட்களையும் அடிவருடிகளை யும் காப்பாற்ற நீங்கள் எடுத்திருக்கும் கேள்விக்கிடமான இந்த நடவடிக்கைகள் அல்லவா இலங்கையை அதள பாதாளத்துக்குள் தள்ளுகின்றது?

சிந்தித்துப் பாருங்கள்!

எவராவது ஒருவர் இந்த நாட்டை நாங்கள் மட்டுமே நேசிக்கின்றோம் என்று கூறும் தகுதி பெற்றவர் அல்ல. இந்த நாட்டின் பெரும்பான்மையினர் மனிதாபிமான முறையிலும், புத்திசாதுர்யத்துடனும் மற்றும் தூர நோக்குடனும் நடந்திருந்தால் தற்போதைய இந்த இடர் நிலை இந்த நாட்டைப் பாதித்திருக்காது. எமது இளைஞர்கள் துப்பாக்கிகள் தூக்கியிருக்க மாட்டார்கள். நாங்கள் இனியாவது எமது பாதையை மாற்றி நிதானம் நோக்கியும் ஐக்கியம் நோக்கியும் செழுமை மிக்க எதிர்காலம் நோக்கியும் பயணிப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**49**

## 47 இற்கான விடைகள்

2009 25

25. 200 இன் அரைவாசியின்1.·. 4 உடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

1.25 2. 30 3. 35

200 இனது அரவாசி 100 ஆகும். இதன. கால.வாசி 25ஆகும்.இதனுடன் 5 இனைக் கூட்டும்போது 30 வரும்


எனவே சரியான விடை 2

2009 26

26.41 தொடக்கம் 45 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகள

41 42 43 44 45 = 4

எனவே சரியான விடை 1



அரைப்பங்கு நீளம் 1m 1m 1m 1m

=4m X 2=8m

நாடா அரைப்பங்காக மடிக்கப்பட்டு நான்கு சம நீளத்துண்டுகளாக்கப்பட்டது.

எனவே சரியான விடை 1

2011- 22

22. பிழையான கோவையைத் தெரிவுசெய்க.
(1) 6x6- 6 = 30 (2) 5 x 5 + 5 = 30 (3) 33 - 33 - 3 = 30

6X6=36-6=30 5X=25+5=30 தவறு

எனவே சரியான விடை - 3

2012- 23


23. சரியான கோவையைத் தெரிவு செய்க.
(1) 888 + 88 + 88 + 8 + 8 = 1000
(2) 888 + 88 + 8 + 8 + 8 = 1000
(3) 888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000

3X8=24+88=112 + 888 =1000

எனவே சரியான விடை 2

35. இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 4லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?

எனவே 4லீற்றரை அளப்பதற்கு 3 லீற்றரில் பாத்தரத்திலும் 1 லீற்றரை 5 லீற்றர்
பாத்திரத்திலும் அளக்க முடியும்.




எனவே சரியான விடை 1

2015 22

22. ஒரு சைக்கிளை வாங்குவதற்கு ரூ. 8500 தேவைப்பட்டது. என்னிடம் ரூ. 4800 இருந்தது. மீதியை இரு நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன். பெற்றுக் கொண்ட பணம்

4800+2400+1300=8500 எனவே சரியான விடை 1


2015 - 28

28. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும் போது "0" எழுதப் படும் தடவைகளின் எண்ணிக்கை

100 101 102 103 104 105 106 107 108 109 110
= = = = = = = = = = = =
1 2 3 4 5 6 7 8 9 10 11 12

எனவே சரியான விடை 3

06. ஓர் உணவுப் பொருள் சுற்றப்பட்டுள்ள பொதிதாளில் உள்ள கூட்டுத் துண்டின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.
கூட்டுத்துண்டுக்கு ஏற்க 1. 2 ஆகியனவராக இருக்கத்தக்க முறையே யாவை?




3. உற்பத்தி செய்த திகதியும் காலாவதியாகும் திகதியும்

எனவே சரியான விடை 3

10. " திடசங்கற்பம்" என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்.

திடசங்கற்ப ம் கபடம் எனவே சரியான விடை 1

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# ஆளும்தரப்புக்குள் முரண்பாட்டை இனியும் தீவிரப்படுத்த முடியாது

## பிரதமருடன் விரைவில் பேச்சு என்கிறார் திஸ்ஸ விதாரண



**கொழும்பு,ஏப்.25**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், பங்காளிக்கட்சியின் தலைவர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் வாரம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

ஒருசில அடிப்படை பிரச்னைகளுக்குத் துரிதமாகத் தீர்வு காண்பது அவசியமாகும். ஆளும் தரப்புக்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாட்டை இனியும் தீவிரப்படுத்த முடியாது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஆளும்கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் எழுந்துள்ள முரண்பாடுகளுக்கும், கருத்து வேறுபாடுகளுக்கும் தீர்வு காணும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த 19 ஆம் திகதி கட்சித் தலைவர் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கட்சித்தலைவர் கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் மாத்திரம் பங்குபற்றுவது வழமை. ஆனால், அன்று வழமைக்கு மாறாக பொதுஜன பெரமுனவின் மாவட்ட தலைவர்கள் மற்றும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டணியின் உள்ளகப் பிரச்னைகளுக்கு பிரதமருடன் தனிப்பட்ட முறையில் பேச்சுக்களை முன்னெடுக்க எதிர்பார்த்திருந்தோம். ஆனால், அன்று அதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெறவில்லை. இதனால், பெரும்பாலான பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

பிரதமருடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க அனுமதி கோரியுள்ளோம். எதிர்வரும் வாரம் இருதரப்பு பேச்சுவார்த்தை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆளும்கட்சிக்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றுக்குத் துரிதமாக தீர்வு காண்பது அவசியமாகும்- என்றார். (எ)

# ஆபத்தான நிலையில் மூன்று மாவட்டங்கள்!



கொழும்பு,ஏப்.25

கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்கள் அதி அவதான மாவட்டங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் நாளாந்த கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதி கரித்து வருகிறது என பொதுச் சுகாதார பரிசோத கர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரி வித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கை தற்போது மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. மேல் மற்றும் வடமேல் மாகாணங்களின் சில பிரதேசங்களைப் போன்று இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் கொரோனா கொத்தணிகள் உருவாகி தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர். இந்த வார இறுதி நாள்களில் மிகவும் பொறுப்புடன் செயல்படுமாறு நாம் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். ஓரளவேனும் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படும் என நாம் எதிர்பார்த்தோம். எனினும், இதுவரை அவ்வாறான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில், உயிர்களையும், ஆரோக்கியத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு 100 சதவீதம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ரமழான் பண்டிகையை கொண்டாட முஸ்லிம் மக்களுக்காக சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எனவே, அவதான நிலைமையின் கீழ் மதத்தலைவர்கள் மற்றும் பக்தர்கள் பொறுப்புடன் செயல்படுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# ஐந்து கிராமங்கள் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஏப்.25

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மறுஅறிவித்தல் வரை, கனேவத்த புகையிரத நிலையத்தில் எந்தவொரு புகையிரதமும் நிறுத்தப்படமாட்டாது என புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு புகையிரத திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் இந்த புகையிரத நிலையத்துக்கு அருகாமையிலுள்ள ஐந்து கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விசேட பொருளாதார வலய*

## ஆணைக்குழு உறுப்பினர்களில் நான்கு பேர் இலங்கையர்களாம்



கொழும்பு,ஏப்.25

கொழும்பு துறைமுக நகர் விசேட பொருளாதார வலயத்துக்கான ஆணைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழாக இருப்பினும் அதில் நான்கு பேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜெயவர்த்தன உயர்நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர் விசேட பொருளாதார வலயத்துக்கான சட்டமூலம் தொடர்பான மனுக்கள் மீது 05 நாள்களாக உயர்நீதிமன்றத்தில் இடம்பெற்ற பரிசீலனை நேற்று முன்தினம் நிறைவு பெற்றுள்ளது. இதன்போதே, ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜெயவர்த்தன இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மனுக்கள் மீதான மேலதிக எழுத்து மூல சமர்ப்பணங்களை எதிர்வரும் 29 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்னர் உயர்நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு நீதியரசர்கள் குழாம் அனைத்துத் தரப்பினருக்கும் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனோ அல்லது மக்கள் அபிப்பிராயத்தினூடாகவோ நிறைவேற்றும் அவசியம் இல்லை எனவும், பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றுவது போதுமானது எனவும் உத்தரவிடுமாறு சட்டமா அதிபர் சார்பில் மன்றில் ஆஜராகிய மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் பர்ஸானா ஜமீர் மனு மீதான பரிசீலனையின் போது தெரிவித்தார்.

இந்த சட்டமூலத்தில் அரசமைப்புக்கு முரணாக எவ்வித சரத்துக்களும் உள்ளடக்கப்படவில்லை. தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடன் அரசாங்கத்தால் இந்த திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய மற்றும் நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜெயவர்த்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் மனுக்கள் பரீசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. (எ)

## எம்மை பழிவாங்க முற்படின் சர்வதேசத்திடம் செல்வோம்!

*கபீர் ஹாசிம் சொல்கிறார்*



கொழும்பு,ஏப்.25

**நீதிமன்ற அதிகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழுவொனறுக்கு வழங்குவது நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாகும். அதனால், அரசாங்கம் விஷேட ஆணைக்குழு அமைத்து பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவை அரசியல் ரீதியில் வேட்டையாட முற்பட்டால் நாங்கள் சர்வதேசத்திடம் முறையிடவும் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.**

2015 முதல் 2019 நவம்பர் மாதம் 19ஆம் திகதிவரையான காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்கள் தொடர்பில் ஆராய விசாரணை குழு அமைத்து, அதன் பரிந்துரைகளை குற்றப் புலனாய்வுத் துறைக்கு வழங்கியிருந்தோம்.

குற்றப்புலனாய்வுத்துறை அதுதொடர்பில் விசாரணை செய்து அதன் அறிக்கையை சட்டமா அதிபருக்கு வழங்கியிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களமே குற்றமுள்ளவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்தது. அதனால், நாங்கள் காட்டுச்சட்டத்தைப் பின்பற்றி செயல்படவில்லை. தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு சாட்சியம் இல்லை என்றால் அவருக்கு அதிலிருந்து விடுதலையாகலாம்.

இந்நிலையில், நீதிமன்றத்துக்கு சென்று தங்களின் குற்றமற்ற தன்மையை ஒப்புவிக்க ஏன் அச்சப்படுகின்றீர்கள். அத்துடன் அரசாங்கத்தின் விஷேட ஜனாதிபதி ஆணைக்குழு நாட்டின் சுயாதீன நீதித்துறைக்குப் பாரிய அச்சுறுத்தலாகும்.

அதனால்தான் இதற்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் உட்பட பல அமைப்புக்கள் நீதிமன்றம் சென்றிருக்கின்றன. இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவது மக்களின் இறையாண்மைக்கு எதிராகும்.

மேலும், எமது நாடு தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

நீதிமன்றத்துக்கு அப்பால் ஆணைக்குழுவொன்று தீர்ப்பு வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்வது நாட்டின் சுயாதீன நீதித்துறைக்குப் பாரிய அச்சறுத்தலாகும். அதனால், அரசாங்கம் விஷேட ஆணைக்குழு அமைத்து ஹரீன் பெர்னாண்டோ உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்களை அரசியல் ரீதியில் வேட்டையாட முற்பட்டால். அதற்கு எதிர்க்கட்சி என்றவகையில் நாங்கள் சர்வதேசத்துக்கு செல்லவும் தயார்- என்றார். (எ)

## சஞ்ஜீவ முன்வைத்த திருத்தங்களை குப்பையில் வீசக்கூறிய விஜயதாஸ

*உயர்நீதிமன்றில் கடும் எதிர்ப்பு*



கொழும்பு,ஏப்.25

நாட்டில் ஒரு சட்டமா அதிபரே செயல்பட முடியும். அவரைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டே உயர் நீதிமன்றின் நியாயாதிக்கத்தை உறுதி செய்யும் விஷேட மனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நிலையில், சட்டமூலங்களில் பாராளுமன்றக் குழு நிலையின் போது முன்னெடுக்கப்பட எதிர்பார்க்கப்படும் திருத்தங்களை அவரே முன்வைக்க வேண்டும்.

இதுவே உயர்நீதிமன்ற சம்பிரதாயம். ஆனால், இந்தத் துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூல விசாரணைகளில் என்றும்காணாத நடைமுறைகளையே காணமுடிகிறது என ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்தில், பாராளுமன்றக் குழு நிலையின்போது கொண்டுவரப்படவுள்ள திருத்தங்களின் பட்டியலை, இடையீட்டு மனுதாரரான நிதி அமைச்சின் செயலர் ஆட்டிகல சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜெயவர்த்தன, உயர்நீதிமன்றுக்கு சமர்ப்பித்த நிலையிலேயே, அதனைக் குப்பையில் போடுமாறு பிரதம நீதியரசரிடம் சுட்டிக்காட்டி விஜயதாஸ மன்றில் கருத்துரைத்தார்.

நேற்று முன்தினம், துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிரான மனுக்களின் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் விஜயதாஸ, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

என்றும் காணாத ஒரு சம்பிரதாயத்தையே இன்று உயர்நீதிமன்றில் அவதானிக்க முடிந்தது. சட்டமூலத்தில் கொண்டுவரப்படவுள்ள திருத்தங்களை வழமையாக சட்டமா அதிபர் தரப்பே மன்றுக்கு முன்வைக்கும். இங்கு என்ன நடக்கிறது?

இடையீட்டு மனுதாரர்களான ஜனாதிபதியின் செயலரின் சட்டத்தரணியும், நிதி அமைச்சின் செயலரின் சட்டத்தரணியும் திருத்தங்களை முன்வைக்கின்றனர். நாட்டில் ஒரு சட்டமா அதிபரே செயல்பட முடியும். வழமைக்கு மாறான சம்பிரதாயத்தை மன்றில் அவதானிக்கின்றோம்.

இவ்வாறான திருத்தங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அதனை குப்பையில் போட வேண்டும். சட்டமா அதிபர் ஊடாகவே, சட்டமூலம் தொடர்பிலான இறுதித் திருத்தங்கள் மன்றுக்கு அளிக்கப்படல் வேண்டும்- எனக் குறிப்பிட்டார். (எ)

## 3 வாரங்களில் மூன்றாம் அலை? எச்சரிக்கிறது மருத்துவர் சங்கம்

கொழும்பு,ஏப்.25

நாட்டில் அடுத்து வரும் மூன்று வாரங்களில் கொரோனா பரவலின் மூன்றாம் அலை ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது என இலங்கை மருத்துவர் சங்கம் எச்சரித்துள்ளது.

கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்களின் எண்ணிக்கை மாத்திரமன்றி வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படுவர்கள், தீவிர சிகிச்சை பிரிவுகளில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை, ஒட்சிசன் தேவையுடையோர் எண்ணிக்கை என்பன சடுதியாக அதிகரித்துள்ளன.

கொழும்பு மாநகர எல்லைக்குள் எழுமாறான சோதனைகள் மூலம் கண்டறியப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

அத்தோடு அறிகுறியற்ற மற்றும் தொற்று ஏற்பட்ட பின்னர் பாரதூரமான நிலைமை ஏற்படுவதையும் மருத்துவர்கள் அவதானித்துள்ளளர். தற்போதைய வைரஸ் விரைவாக தொற்றுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

இளம் நோயாளர்கள் மத்தியில் பாரதூரமான அறிகுறிகளும் அவதானிக்கப்படுகின்றன. கொழும்பு ரிட்ஜ்வே சீமாட்டி மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், சிறுவர்கள் மத்தியில் தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. ஆய்வுகூட ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து, சடுதியாக தொற்றும் சாத்தியமுள்ள புதியதொரு உருமாறிய வைரஸ் உள்ளதா? என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த வைரஸ் இலங்கையில் ஏற்கனவே இருந்த உருமாறிய வைரஸில் இருந்து தோன்றியதாக அல்லது வேறொரு நாட்டிலிருந்து இலங்கைக்குள் புதிதாக வந்திருக்கக்கூடிய வைரஸா என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, இத்தகைய புதிய வைரஸ் பரவுவதன் சாத்தியம் காரணமாக, ஒவ்வொரு பிரஜையும் மூன்றாம் அலையின் விளைவுகளைப் புரிந்துகொள்வது முக்கியமானது.

புதிய வைரஸ் சடுதியாக பரவக்கூடிய ஆற்றல்களை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்குமாயின், ஆகக்கூடுதலானோருக்கு தொற்று ஏற்படலாம். அதன் மூலம் பாரதூரமான நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து, மருத்துவமனைகள் கையாள முடியாதளவுக்கு நெருக்கடி ஏற்படக்கூடும். இது கூடுதலான மரணங்களுக்கு வழிவகுக்கும். உருமாறிய புதிய வைரஸ், வயது முதிர்ந்தவர்களை விடவும் இளவயதினருக்கு கூடுதலாகப் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, சகல பிரஜைகளுக்கும் கொரோனா தொற்றும் அபாயத்தைத் தணிப்பதற்காக சாத்தியமான சகல பொதுச் சுகாதார நடவடிக்கைகளையும் மிகத் தீவிரமாக அனுசரிப்பது மிகவும் முக்கியமானது.

சகல பொதுச் சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அனுசரித்து, மிகவும் அத்தியாவசியமான தேவைகளுக்கு மாத்திரமே வீட்டைவிட்டு வெளியில் செல்வது சிறந்தது என்று இலங்கை மருத்துவர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## பசுவை கொன்ற நபர் படுகொலை!

கொழும்பு,ஏப்.25

மின் கம்பியில் சிக்க வைத்து பசுவைக் கொன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் பிணையில் வீடு திரும்பியபோது கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

ஊரகஸ்மங்கஸ் சந்தி, கலுவலகொடை பகுதியில் நேற்று முன்தினம் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் எல்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 62 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பலியானவர் பசுவின் உரிமையாளரின் மகனால் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் அப்பகுதியிலிருந்து தப்பிச்சென்றுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு ஏன் இந்த நிலை?

இரண்டாம் கட்ட கொரோனா அலையால் அதிகரித்துள்ள தொற்றாளர் எண்ணிக்கையும் மரணங்களும் இந்தியாவின் நலிவடைந்த சுகாதாரக் கட்டமைப்பு செயலிழக்கும் நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது.

குறைவான பணியாளர்களைக் கொண்ட மருத்துவமனைகள் நோயாளர்களால் நிறைந்துவழிகின்றன. மருத்துவத்திற்கு தேவையான ஒட்சிசனுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதிதீவிர சிசிச்சைப் பிரிவுகள் நோயாளர்களால் நிறைந்து காணப்படுகின்றன. ஏறத்தாழ அனைத்து வென்டிலேட்டர் சுவாச உதவிக் கருவிகளும் பயன்பாட்டில் உள்ளன. இறந்தவர்களின் உடலங்கள் சவச்சாலைகளிலும் மயானங்களிலும் குவிந்து கிடக்கின்றன.

இந்த நிலைமை இந்தியாவில் சுகாதார பாரமரிப்பு நெருக்கடியை ஆழப்படுத்திவிட்டுள்ளதுடன் பயங்கரமான நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது.

ஏறத்தாழ 140 கோடி சனத்தொகையோடு உலகில் இரண்டாவது சனத்தொகை கூடிய நாடாக விளங்கும் இந்தியாவுக்கு அதன் சனத்தொகையும் பராதூரமான கொவிட்-19 சவால்களைத் தோற்றுவித்துள்ளது.

தினமும் 27 லட்சம் தடுப்பூசிகள் இந்தியாவில் வழங்கப்படுகின்றபோதிலும் சனத்தொகை விசாலமாக இருப்பதால் இன்னமும் 10 குறைவானவர்களுக்கே முதலாவது தடுப்பூசி போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இதுவரை பதிவான கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 15.9 மில்லியன்களாக இருக்கின்றது.

இது 32.6 மில்லியன்களுடன் முதலிடத்திலுள்ள அமெரிக்காவுக்கு அடுத்து இரண்டாம் நிலையில் இந்தியாவின் நிலையைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

கொரோனாவால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கையில் அமெரிக்கா(583,330) பிரேஸில்381,687ஆகியவற்றிற்கு அடுத்த நிலையில் இந்தியா 184, 657 மரணங்களுடன் மூன்றாம் நிலையில் உள்ளது.

இரண்டாம் கட்ட கொரோனா அலையால் அதிகரித்துள்ள தொற்றாளர் எண்ணிக்கையும் மரணங்களும் இந்தியாவின் நலிவடைந்த சுகாதாரக் கட்டமைப்பு செயலிழக்கும் நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது.

குறைவான பணியாளர்களைக் கொண்ட மருத்துவமனைகள் நோயாளர்களால் நிறைந்துவழிகின்றன மருத்துவத்திற்கு தேவையான ஒட்சிசனுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதிதீவிர சிசிச்சைப் பிரிவுகள் நோயாளர்களால் நிறைந்து காணப்படுகின்றன. ஏறத்தாழ அனைத்து வென்டிலேட்டர் சுவாச உதவிக் கருவிகளும் பயன்பாட்டில் உள்ளன.

இறந்தவர்களின் உடலங்கள் சவச்சாலைகளிலும் மயானங்களிலும் குவிந்து கிடக்கின்றன.

**எப்படி இந்தியா இந்த நிலைக்கு சென்றது?**

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இந்தியாவில் தொற்றாளர்கள் எண்ணிக்கை சரிவடையத்தொடங்கியபோது மோசமான கட்டத்தை இந்தியா கடந்துவிட்டது என்ற மாய நம்பிக்கை அதிகாரிகளுக்கு ஏற்பட்டது.

தொற்றாளர்கள் எண்ணிக்கை கடந்த செப்ரெம்பர் முதல் சுமார் 30 வாரங்களுக்கு வீழ்ச்சியடைந்து கடந்த பெப்ரவரி நடுப்பகுதி முதலாக அதிகரிக்கத் தொடங்கியது.

இந்தியா அதன் சுகாதாரக் கட்டமைப்புக்களை பெருப்பிப்பதற்கும் தடுப்பூசி ஏற்றுதலை அதிகப்படுத்து வதற்குமான சந்தர்ப்பத்தை இந்தியா தவறவிட்டுவிட்டதாக நிபுணர்களை மேற்கோள் காட்டி ஏபி செய்திச் சேவையின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கொரோனா நிலையை அவதானித்து வந்த அமெரிக்க மிச்சிக்கன் பல்கலைக்கழக உயிரியல் புள்ளிவிவரவியலாளர் பரமார் முகர்ஜி "நாம் வெற்றிக்கு மிகவும் அருகில் இருந்தோம்" என்கிறார் .



தொற்றுநோய் குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் ஆபத்துக் குறித்த அபாய எச்சரிக்கைகள் இருந்தபோதும்

இதுபோன்ற பாரிய அதிகரிப்பிற்கு இந்தியா தயார்நிலையில் இருக்கவில்லை என்கிறார் இந்தியாவின் பொதுச் சுகா தார ஸ்தாபனத்தின் தலைவர் கே. சிறி நாத் ரெட்டி.

அரசாங்கத்தின் விமர்சகர்களோ தேர்தல்களையும் இந்து சமய விழாக்களையும் நிறுத்தாமல் முன்கொண்டு நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் தொடர்பாக

சுட்டிக்காட்டுக்கின்ற அதேவேளை இவை நிலைமையை மோசமாகக்க உதவியிருக்கலாம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

'நாடெங்கிலும் அதிகாரிகள் சுகாதாரத்திற்கு முன்னுரிமை கொடுப்பதை புறந்தள்ளிச் செயற்பட்டனர்' என்கிறார் ரெட்டி.

கடந்த இரண்டு வாரங்களில் நிலைமை மிகவும் பாரதூரமடைந்துள்ளது. ஏப்ரல் 6ஆம் திகதியன்று மக்கள் தொகையில் ஒவ்வொரு 100, 000 பேரில் 6.75 பேருக்கு கொரானா தொற்றுள்ளமை இனங்காணப்பட்டது.

இதுவே ஏப்ரல் 20ஆம்திகதியன்று மக்கள் தொகையில் ஒவ்வொரு 100,000 பேரில் 18.04 பேருக்கு கொரோனா நோய்த்தொற்று என்ற அளவிற்கு கடும் அதிகரிப்பை காண்பித்து நிற்கின்றது.

இந்தியாவில் முதலில் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸ் உட்பட புதிய திரிபுகளும் இந்த அதிகரிப்பிற்கு வழிகோலியிருக்கலாம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தியாவின் அதி உயர் நிலை சுகாதார அதிகாரியான ராஜேஷ் புஷான் ஏன் அதிகாரிகள் சிறப்பாக தயார்ப்படுத்த தவறினர் என்பது குறித்து கருத்துச் சொல்லத் தவறிய போதும்

' ஏன் நாம் இதனைத் தவறவிட்டோம்? நாம் தயாராக இருந்தோமா? போன்ற கேள்விகளை எழுப்பி கடந்த காலம் குறித்து ஆராய இது காலமல்ல என்று குறிப்பிட்டார்.

**ஏன் இந்தியாவின் சுகாதார கட்டமைப்பு சீர்குலைகின்றது?**

இந்தியா அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகச்சிறிய தொகையை சுகாதார கட்டமைப்பிற்காக செலவழிக்கின்றது.

ஏனைய முக்கியமான பொருளாதார சக்திகொண்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா மிகமிக குறைவாகவே சுகாதார துறைக்காக ஒதுக்குகின்றது.


கடந்த வருடம் கொரோனா வைரஸ் இந்தியாவில் பரவியபோது அரசாங்கம் கடுமையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

மருத்துவமனைகள் நிறைந்து வழிவதைத் தடுப்பதற்காக நாடுதழுவிய அளவில் பல மாதகாலமாக முடக்க நிலையை நடைமுறைப்படுத்தியிருந்தது.

இது கோடிக்கணக்கானவர்களிற்கு பெரும் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு வித்திட்டிருந்தது.

கடந்தாண்டில் கொரோனா தொற்றாளர்கள் ஒப்பீட்டளவில் குறைந்தநிலையில் இருந்தபோது மேலதீக குறுகிய கால ஒப்பந்த அடிப் படையில் சுகாதார பணி யாளர்களை பணிக்கு அமர்த்தல் ,கள மருத் துவமனைகளை அமைத் தல் ,

பொது விருந்து மண்டபங்களில் மருத் துவ படுக்கைகளை நிறுவுதல் போன்ற செயற்பாடுகளை அதி காரிகள் எடுத்திருந்த போதும் இம்முறை அவர்கள் தவறிவிட்டனர்.





கடந்த வருடத்தில் கடைப்பிடித்த நடவடிக்கைகளை நீண்டகால நோக்கின் அடிப்படையில் அதிகாரிகள் கவனத்திற் கொண்டு செயற்படவில்லை என்கிறார் புனேயிலுள்ள இந்தியாவின் விஞ்ஞானக் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைப்பில் நோய்த்தடுப்பு குறித்த ஆய்வில் ஈடுபடும் டாக்டர் வினிதா பேல்.

ஏற்கனவே உள்ள மருத்துவமனைகளின் வசதிகளை மேம்படுத்தி அவற்றின் கொள்ளளவை விசாலப்படுத்துதல் வைரஸை இனங்காணும் தொற்று நோயில் நிபுணர்களை மேலும் சேர்த்துக் கொள்ளல் ஆகிய ஆலோசனைகள் கண்டுகொள்ளாமல் விடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

கடந்தாண்டில் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை சரிவடைந்ததும் கைவிட்ட பல நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க அதிகாரிகள் கடுமையான முயற்சிகளை எடுத்துவருகின்றனர்.

ஒருவருடத்திற்கு முன்னர் மருத்துவ பாவனைக்கான ஒக்ஸிஜன் பற்றாக் குறையை இந்தியா தவிர்த்துக்கொண்டமைக்கு கைத்தொழில் தொழித்துறை ஒக்ஸிஜன் உற்பத்தியை மருத்துவ பாவனைக்கான உற்பத்தியாக மாற்றியதன் மூலம் தவிர்த்துக்கொண்டது.

**அடுத்து என்ன ?**

போதுமான எண்ணிக்கையான மக்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு நோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் பரவலுக்கு உள்ளாவதைத் தடுக்கும் வரையில் இந்தியா அதன் சுகாதார கட்டமைப்பு மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு பாரிய சவாலை எதிர்கொள்ளப்போகின்றது.

இந்தியா உலகில் மிகப் பெரும் தடுப்பூசி உற்பத்தியாளராக இருப்பது ஒருவிதமான நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆனால் உள்நாட்டிலுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிப்பதற்காக கடந்த மார்ச் மாதத்தில் இலங்கை உட்பட பலநாடுகளுக்கான தடுப்பூசி ஏற்றுமதியை இடைநிறுத்தியிருந்தபோதும் போதிய விரைவாக தடுப்பூசியை தயாரிப்பு நிறுவனத்தால் உற்பத்தி செய்யமுடியுமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

மத்திய அரசாங்கம் மறுக்கின்ற போதும் பல மாநில அரசாங்கள் தமக்கு போதியளவு தடுப்பூசி கிடைக்கவில்லை பற்றாக்குறை காணப்படுகின்றது எனக் குற்றஞ்சாட்டியுள்ளன.

45 வயதிற்கும் அதிகமானவர்களுக்கு என்ற நிலையில் இருந்து வளர்ந்த அனைவருக்கும் தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்துவதாக கடந்த திங்கட்கிழமை இந்தியா அறிவித்திருந்தது.

இதன்படி ஏறத்தாழ 900 மில்லியன் பேருக்கு தடுப்பூசி ஏற்றும் பாரிய அபிலாஷையை இந்தியா வெளிப்படுத்தியுள்ளது.

இந்த சனத்தொகையானது ஒட்டுமொத்த அமெரிக்க மற்றும் ஐரோப்பிய சனத்தொகையை விடவும் அதிகமானது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

"தடுப்பூசி ஏற்றுவதே தீவிர பரவலைத்தடுப்பதற்கான ஒரே வழி" எனக் குறிப்பிடும் பொது சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் ரெட்டி ஆனால் தடுப்பூசி ஏற்றும் வேகமும் அது கிடைக்கப்பெறும் அளவுமே அதனைத் தீர்மானிக்கும் எனக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததி

**+94 777 164 524**

**www.arunthathee.com**

## இணைய திருமண சேவை

### மணமகன் விபரம்

| | | |
|---|---|---|
| **16261\|வே\|1996**<br>நயினாதீவு\|இந்து<br>IT Network Ass\|கொழும்பு<br>கேட்டை (விருச்சிகம்)<br>177 செ.மீ \|சூ.செ: 11 | **18211 \|வே \| 1995**<br>கரம்பொன்\| இந்து<br>Exec. at Bank\|கொழும்பு<br>ரோகிணி (இடபம்)<br>180 செ.மீ \|செவ் : 01 | **17880 \|வே\| 1994**<br>கல்வியங்காடு \| இந்து<br>Accountant \| UK<br>திருவோணம் (மகரம்)<br>176 செ.மீ \|செ.வ் : 07 |
| **16508\|வே\|1993**<br>காரைநகர் \|இந்து<br>Engineer\| சிங்கப்பூர்<br>பரணி (மேடம்)<br>175 செ.மீ | **17627 \|வே \| 1993**<br>உடுப்பிட்டி \| இந்து<br>Engineer\|சிங்கப்பூர்<br>பூசம் (கடகம்)<br>174 செ.மீ | **16544 \|வே\| 1992**<br>கரவெட்டி \|இந்து<br>QS\| யாழ்<br>விசாகம் (துலாம்)<br>176 செ.மீ \|செ.வ் : 08 |
| **17609\|கோ\|1992**<br>சுண்ணாகம் \|இந்து<br>Doctor\|கொழும்பு<br>மகம் (சிம்மம்)<br>182 செ.மீ \|செ: 7 | **17582 \|வே \| 1992**<br>காரைநகர் \| இந்து<br>Sen.Software Eng<br>உத்திரட்டாதி (மீனம்)<br>சிங்கப்பூர் \|செவ் : 12 | **18310 \|வே\| 1992**<br>பருத்தித்துறை \|இந்து<br>Bank Exec. \|வவுனியா<br>உத்தரம் (சிம்மம்)<br>171 செ.மீ |
| **15547 \|வே\| 1992**<br>திருநெல்வேலி \|இந்து<br>Doctor \| SL<br>பூசம் (சிம்மம்)<br>174 செ.மீ | **18511 \|வே \| 1991**<br>நல்லூர் \| இந்து<br>Software Eng\|கொழும்பு<br>உத்திரட்டாதி (மீனம்)<br>165 செ.மீ \|சூ.செ : 08 | **17063 \|வே\| 1991**<br>வடலியடைப்பு \|இந்து<br>Accountant \| கொழும்பு<br>பூரட்டாதி (கும்பம்)<br>170 செ.மீ \|சூ.செ : 08 |
| **17555 \|வே\| 1991**<br>சண்டிலிப்பாய் \|இந்து<br>Network Eng\|கொழும்பு<br>மூலம் (தனுசு)<br>183 செ.மீ \|சூ .செ: 6 | **16739 \|வே \| 1991**<br>கிளிநொச்சி \| இந்து<br>Ch.Accountant\|கட்டார்<br>அனுஷம் (விருச்சிகம்)<br>178 செ.மீ \|சூ.செ : 2 | **17357 \|வி\| 1991**<br>யாழ் நகர் \|இந்து<br>Engineer \| யாழ்<br>சதயம் (கும்பம்)<br>168 செ.மீ \|சூ.செ : 6 |
| **16532 \|வே\| 1991**<br>மானிப்பாய் \|இந்து<br>PHD Researcher\|Aus<br>அனுஷம் (விருச்சிகம்)<br>165 செ.மீ \|செ: 7 | **18235 \|வே \| 1991**<br>சாவகச்சேரி \| இந்து<br>Engineer\|வவுனியா<br>மிருகசீரிடம் (இடபம்)<br>174 செ.மீ | **16916 \|வே\| 1991**<br>திருநெல்வேலி \|இந்து<br>Software Eng\| கொழும்பு<br>பூசம் (கடகம்)<br>185 செ.மீ \|செ :12 |
| **15844 \|வே\| 1991**<br>உப்பிளான் \|இந்து<br>Doctor \| யாழ்<br>அத்தம் (கன்னி)<br>176 செ.மீ \| செ: 1 | **18379 \|வே \| 1990**<br>அளவெட்டி \| இந்து<br>Engineer \|யாழ்<br>சுவாதி (துலாம்)<br>182 செ.மீ \|செவ் : 7 | **17678 \|வே\| 1990**<br>பருத்தித்துறை \|இந்து<br>QS \| United Arab<br>கேட்டை (விருச்சிகம்)<br>179 செ.மீ \|செ : 07 |
| **18454 \|வே\| 1990**<br>காரைநகர் \|இந்து<br>System Eng \| சிங்கப்பூர்<br>உத்திரட்டாதி (மீனம்)<br>153 செ.மீ \|செ : 1 | **17576 \|வே\| 1989**<br>சுழிபுரம் \|இந்து<br>Doctor \| யாழ்<br>பூராடம் (தனுசு)<br>155 செ.மீ \| செ : 07 | **15541 \|வே\| 1989**<br>கொக்குவில் \|இந்து<br>Doctor \| கொழும்பு<br>பூரட்டாதி (கும்பம்)<br>180செ.மீ \|சூ-செ : 9 |

### மணமகள் விபரம்

| | | |
|---|---|---|
| **18565 \|ந \|1998**<br>யாழ் நகர் \|RC<br>2nd Year Medical \|யாழ்<br>சதயம் (கும்பம்)<br>165 செ.மீ | **17621 \|வே \| 1996**<br>கரம்பொன் \| இந்து<br>Software Eng\|கொழும்பு<br>ரேவதி (மீனம்)<br>165 செ.மீ | **16039 \|வே\| 1996**<br>கரவெட்டி \|இந்து<br>QS \| யாழ்<br>பூராடம் (தனுசு)<br>170 செ.மீ \|சூ.செ : 5 |
| **16210 \|வே\| 1995**<br>சாவகச்சேரி \|இந்து<br>Lecturer \| கொழும்பு<br>உத்தரம் (கன்னி)<br>165 செ.மீ \|செ: 4 | **15191 \|வே \| 1995**<br>யாழ் நகர் \| இந்து<br>English Teacher \|யாழ்<br>அத்தம் (கன்னி)<br>Divorced | **15709 \|வே\| 1995**<br>காரைநகர் \|இந்து<br>Accountant \| கொழும்பு<br>மூலம் (தனுசு)<br>155 செ.மீ \| Div |
| **17360 \|வே\| 1995**<br>சணள்டிலிப்பாய் \|இந்து<br>HR Exec.\| கொழும்பு<br>பூரம் (சிம்மம்)<br>168 செ.மீ \|செ: 2 | **15173 \|வே \| 1995**<br>வவுனியா \| இந்து<br>Research Assistant \|UK<br>ரேவதி (மீனம்)<br>164 செ.மீ | **17690 \|வே\| 1994**<br>இடைக்காடு \|இந்து<br>Teacher \| வவுனியா<br>பூரட்டாதி (கும்பம்)<br>160 செ.மீ \|செ : 7 |
| **15480 \|வே\| 1994**<br>புங்குடுதீவு \|இந்து<br>Mgmt Account Ass.<br>புனர்பூசம் (மிதுனம்)<br>கொழும்பு \|செ: 7 | **16243 \|வே \| 1994**<br>காரைநகர் \| இந்து<br>Dev. Officer \|Trinco<br>பூரம் (சிம்மம்)<br>155 செ.மீ \|செ : 8 | **16141 \|வே\| 1994**<br>பருத்தித்துறை \|இந்து<br>Doctor \| கொழும்பு<br>உத்தரம் (கன்னி)<br>171 செ.மீ |
| **17099 \|வே\| 1994**<br>கிளிநொச்சி \|இந்து<br>Manager\| யாழ்<br>அவிட்டம் (மகரம்)<br>158 செ.மீ \|சூ.செ: 10 | **18124 \|வே \| 1994**<br>மானிப்பாய் \| இந்து<br>Research Analyst<br>மகம் (சிம்மம்) \|கொழும்பு<br>158 செ.மீ \| சூ.செ : 03 | **15157 \|வே\| 1994**<br>காரைநகர் \|இந்து<br>Executive \| கொழும்பு<br>அஸ்வினி (மேடம்)<br>சூ.செ : 01 |
| **15673 \|வே\| 1994**<br>நுவரெலியா \|இந்து\|<br>Public Relation officer<br>அத்தம் (கன்னி) \| யாழ்<br>158 செ.மீ \|சூ.செ: 7 | **16958 \|வே \| 1993**<br>மாவிட்டபுரம்\| இந்து<br>Research Ass. \|யாழ்<br>மூலம் (தனுசு) \| Divorced<br>156 செ.மீ \|செவ் : 4 | **17914 \|வே\| 1993**<br>காரைநகர் \|இந்து<br>English Teacher \| யாழ்<br>கார்த்திகை (இடபம்)<br>150 செ.மீ \| செ : 1 |
| **16126 \|வே\| 1993**<br>யாழ் நகர் \|இந்து<br>Accountant \| கொழும்பு<br>ரேவதி (மீனம்)<br>162 செ.மீ \|சூ.செ: 6 | **16883 \|வே \| 1993**<br>தெல்லிப்பளை\| இந்து<br>Finance Exec.\|கொழும்பு<br>உத்தரட்டாதி (மீனம்)<br>165 செ.மீ \|செ : 7 | **17258 \|வே\| 1993**<br>மானிப்பாய் \|இந்து<br>Architecture \|கொழும்பு<br>பூராடம் (தனுசு)<br>167 செ.மீ |
| **16985 \|வே\| 1993**<br>நெல்லியடி \|இந்து<br>UK Civil Service \| UK<br>உத்தரம் (சிம்மம்)<br>162 செ.மீ | **17681 \|கோ \| 1993**<br>இணுவில் \| இந்து<br>Sen QA Eng\|கொழும்பு<br>பூரம் (சிம்மம்)<br>162 செ.மீ | **15335 \|வே\| 1993**<br>வேலணை \|இந்து<br>Coordinater \| கொழும்பு<br>கார்த்திகை (இடபம்)<br>163 செ.மீ |



தற்பொழுது விற்பனையில்
அரச தனியார் தொழில் புரியும் உள்நாட்டு,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்

*அருந்ததி திருமண இதழ் 23*

இணையத்தில் வாசிக்க
www.rebrand.ly/i23

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு இலக்கத்தை (Profile No) Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

**வரன் தேடுவோம் வாருங்கள்**

*(திருமணத் தேடலை இலகுவாக்கும் முயற்சி)*

**25.04.2021 Marine Grand வெள்ளவத்தை காலை 09.00 மணிமுதல் 12.00 மணி வரை**

ஆயிரக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு அரச தனியார் தொழில் புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் இணைந்து செயல்பட்டால் கொரோனாவை கட்டுப்படுத்த முடியும்

## யாழ்.மாவட்ட கட்டளை தளபதி அறிவுரை



யாழ்ப்பாணம்,ஏப்.25

**யாழ். மாவட்டத்தில் அனைவரும் இணைந்து கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவோம் என மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம்மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற விஷேட கொரோனா தடுப்பு செயலணிக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் அதிதீவிரமாக பரவும் கொரோனா வைரஸ் நோயினைக்கட்டுப்படுத்துவதற்கு தேசிய ரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், அதேபோன்று தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில்எவ்வாறான செயல்பாடுகளை மேற்கொள்ளல். வடக்கு மாகாணத்தில்கொரோனா கட்டுப்பாட்டினை எவ்வாறு பேணுவது என்பது தொடர்பில் ஆராய்ந்ததோடு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் தொடர்பிலும் ஆராய்ந் தோம்.

அத்தோடு விஷேடமாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு மக்களை எவ்வாறு இந்த நோயிலிருந்து பாதுகாப்பது தொடர்பாகவும் ஆராய்ந்தோம். அத்தோடு எவ்வாறான நடைமுறைகளைக் கையாள்வதன் மூலம் இந்தத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடியும் என்பது தொடர்பிலும் ஆராய்ந்தோம்.

விஷேடமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு சுகாதாரப் பரிசோதகர்கள் அத்தோடு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மக்களுக்கு ஏற்றவாறாக பொதுச் சுகாதார பரிசோதகர்களைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்,

பொதுச் சந்தை, வியாபார நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் பொதுமக்களின் ஒன்றுகூடல்களைக் கட்டுப்படுத்த உரிய செயல்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தோம்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கி மாவட்டத்தில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத்தடுப்பதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

கிராமங்கள் மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் விஷேட கூட்டங்களைக் கூட்டி கிராம மட்ட சுகாதார குழுக்களின் செயல்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வைப்பதன் மூலம் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்தலாம்.

ஏற்கனவே, இராணுவத்தினரால் யாழ். நகர்ப் பகுதியில் கிருமித்தொற்று நீக்கப்பட்டு சுத்தம் செய்யப் பட்டுள்ளது.

அத்தோடு எம்மால் தொடர்ச்சியாக யாழ். நகர்ப் பகுதியில் இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படும்- எனத் தெரிவித்தார். (எ)



# போர்ட்சிற்றி தொடர்பில் தேரர்களுக்கு விளக்கம்

கொழும்பு,ஏப்.25

பௌத்த ஆலோசனை சபைக் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல்10 ஆவது தடவையாக ஜனாதிபதி அலுவலகத்தில் கூடிய போது, கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தொடர்பில் தேரர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இத்திட்டம் தொடர்பில் விரிவாகத் தெளிவுபடுத்தியதுடன் பொருளாதாரத்துக்கும், நாட்டுக்கும் கிடைக்கும் பயன்கள் பற்றியும் கருத்து வெளியிட்டார்.

நில அளவை விரிவுபடுத்தி புதிய முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் ஒரு நாடு என்ற வகையில் பெற்றுக்கொள்ளும் பாரிய வெற்றியாகும். தவறான கருத்துக்களைப் பரப்பி அனைத்தையும் எதிர்ப்பதற்கு பதிலாக ஒரு தேசமாக முன்னேறுவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்- என்றார். இதே வேளை, இந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் மக்களுக்கு சரியான தெளிவை வழங்கி, அதற்கான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேரர்கள் சுட்டிக்காட்டினர்.

கொரோனா புதிய உருமாற்றம், சுகாதாரத் துறையின் ஆலோசனைகள் தொடர்பில் ஜனாதிபதி மகா சங்கத்தினருக்கு தெளிவுபடுத்தினார்.

புத்தபெருமான், திரிபீடகம் மற்றும் பௌத்த புண்ணிய தலங்கள் குறித்து தவறான கருத்துக்களை பரப்புவோர் குறித்து கண்டறிய நியமிக்கப்பட்ட குழு தமது பரிந்துரைகளை ஆலோசனை சபைக்கு முன்வைத்தது.

எதிர்வரும் கூட்டத்தில் இது தொடர்பில் மகா சங்கத்தினரின் கருத்துக்களை குழுவிடம் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பௌத்த ஆலோசனை சபையின் உறுப்பினர்களான மகா சங்கத்தினர், இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் அரச அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (எ)

# வடக்கில் மே முதல் வாரம் இரண்டாம் கட்ட தடுப்பூசி



யாழ்ப்பாணம்,ஏப்.25

வடக்கு மாகாணத்தில் இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசி எதிர் வரும் மே மாதம் 3ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை வழங்கப்பட வுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மாவட்ட கொரோனா செயலணி கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்கை பொருத்தவரைக்கும் தற்போது கொரோனா தொற்று நிலைமையானது தீவிரமடைந்து இருந்தாலும் பூரண கட்டுப்பாட்டில் இருக்கின்றது. எனினும், அதனைத் தொடர்ந்து பேணுவதற்கு முப்படையினர், சுகாதாரப் பிரிவினர், பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். குறிப்பாக பொதுமக்கள் ஒன்றுகூடல்களைத் தவிர்த்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும், ஏற்கனவே சுகாதாரப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட தடுப்பூசியின் இரண்டாம் கட்ட தடுப்பூசி எதிர்வரும் மே மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் 10ஆம் தேதி வரை வழங்கப்படவுள்ளது என அவர் தெரிவித்தார். (எ)

# வீட்டுத்திட்டங்களை பூர்த்தி செய்ய 7500 மில்லியன் ரூபா நிதி தேவை

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் பிரதமருக்கு கடிதம்

கிளிநொச்சி,ஏப்.25

கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு வடக்கு மாகாணத்துக்கு மட்டும் 7512.814 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது. எனவே, இந்த நிதியைப் படிப்படியாக விடுவித்து மக்களை நெருக்கடியிலிருந்து மீட்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.



அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கடந்த காலத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான பணம் முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என சில கட்டங்கள் வழங்கப்பட்ட நிலையில் மிகுதிப் பணம் இன்னும் வழங்கப்படவில்லை. இதனால், வீட்டுத்திட்டப் பயனாளிகளான பொதுமக்கள் கடும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

வீட்டுத்திட்டங்கள் மூலம் வீடுகளைப் பெற்றவர்கள் அதனைப் பூர்த்தி செய்ய முடியாது அரைகுறையான கட்டுமானங்களுடன் உள்ளனர்.

இவர்களின் நிலைமையும் பரிதாபத்துக்குரியதாக உள்ளது. இவர்கள் தற்போது வாழ்கின்ற தற்காலிக வீடுகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

எனவே, மேற்படி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு படிப்படியாக வீட்டுத்திட்ட நிதியை விடுவித்து மக்களை நெருக்கடிக்குள் இருந்து மீட்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர் இந்த வீட்டுத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 1189.330 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 1912.747 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 1592.27 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு 1573.348 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 1245.362 மில்லியன் ரூபாவும் (மொத்தம் 7512.814 மில்லியன் ரூபா) நிதி தேவைப்படுகிறது எனவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

## கொழும்பில் ஐம்பதிற்கும் மேற்பட்ட

# அழகுக்கலை நிபுணர்கள் பங்குபெறும் மணப்பெண் அலங்காரக் காட்சி இன்று

கொழும்பு,ஏப்.25

வரன் தேடல் முதல் திருமண ஏற்பாடு வரை தனக்கென தனி முத்திரை பதித்த அருந்ததி நிறுவனத்தின் ஏற்பாட்டில் வருடந்தோறும் நடைபெறும் 'மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சி' இம்முறை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

2014ஆம் ஆண்டு வரன் தேடலுக்கான www.Arunthathee.com என்ற இணையத்தளத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அருந்ததி நிறுவனத்தின் வரன் தோடுவோம் வாருங்கள் மற்றும் 'மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சி' என்பன இன்று ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை புகையிரத நிலையத்துக்கு அண்மையில் Marine Grand மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வரன் தேடலை இலகுவாக்கும் முயற்சியான 'வரன் தோடுவோம் வாருங்கள்' நிகழ்வானது காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது. இதில் பிரபல ஜோதிடர்களும் பங்குபெறவுள்ளனர்.

மணப்பெண் அலங்காரக் காட்சியானது (Bridal Fashion show) மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வில், நாட்டின்பல பாகங்களிலிருந்தும்தமிழ், சிங்கள, முஸ்லிம் அழகுக்கலை நிபுணர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றவுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கிறிஸ் மொறிஸ் மிரட்டல்! ராஜஸ்தான் இலகு வெற்றி!!

மும்பை, ஏப். 25

கிறிஸ் மொறிஸின் மிரட்டல் பந்துவீச்சால் கொல்கத்தாவை 133 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்திய ராஜஸ்தான் அணி 6 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். இருபது - 20 போட்டியில் நேற்று நடந்த 18ஆவது போட்டியில் இயன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியும், சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு நிதிஷ் ராணா, ஷப்மன் கில் இணை தொடக்கம் கொடுத்தது. நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த இணை, 5 ஓவர்களில் 23 ஓட்டங்களை எடுத்த நிலையில் கில் 11 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். இதனால், பவர் பிளே முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 25 ஓட்டங்களையே கொல்கத்தா எடுத்தது.

பவர் பிளே முடிந்த சிறிது நேரத்திலேயே 22 ஓட்டங்களுடன் ராணா ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து சுனில் நரைன் 6, இயன் மோர்கன் 0 என அடுத்தடுத்து வெளியேறினர்.

அடுத்து வந்த திரிபாதி ஓரளவு அதிரடியாக ஆட மறுமுனையில் நின்ற தினேஷ் கார்த்திக் நிதானம் காட்டினார். 16ஆவது ஓவரில் இந்த இணை பிரிக்கப்பட்டது. திரிபார் 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 36 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். அடுத்து வந்த அந்ரே ரஷல் 9, தினேஷ் கார்த்திக் 25 என வெளியேற, அடுத்தடுத்து விக்கெட்கள் வீழ்ந்தன. இதனால், இறுதி ஓவர்களில் அதிரடியாக கொல்கத்தா அணியால் ஓட்டங்களைப் பெற முடியாமல் போனது.

இதனால் அந்த அணி, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 133 ஓட்டங்களை எடுத்தது.

ராஜஸ்தான் சார்பில் பந்துவீச்சில் மிரட்டிய, மொறிஸ் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆட்டத்தைத் தொடர்ந்த ராஜஸ்தானின் தொடக்க வீரர்களும் தடுமாறினர். பட்லர் 5, ஜெய்ஸ்வால் 22 என சொற்ப ஓட்டங்களுடன் வீழ்ந்தனர். எனினும், அணியின் ஓட்ட எண்ணிக்கை சற்று வேகமாக அதிகரித்தது.

சஞ்சு சாம்சன் நிலைத்து ஆட, சிவம் துபே 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 22, ராகுல் தெவாட்டியா 5 ஓட்டங்கள் என வீழ்த்தப்பட்டனர். ஆனாலும், சஞ்சு சாம்சனுடன் இணைந்த டேவிட் மில்லர் அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றார்.

இறுதியில், 18.5 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 134 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சஞ்சு சாம்சன் 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 42 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 3 பௌண்ட்ரிகளுடன் 24 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

கொல்கத்தாவின் பந்துவீச்சில் வருண் சக்கரவர்த்தி 2 விக்கெட்களையும், சிவம் மவி, பிரசித் கிருஷ்ணா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக ராஜஸ்தான் அணிக்காக 4 விக்கெட்களை வீழ்த்திய கிறிஸ் மொறிஸ் தெரிவானார். (ஐ)




# திமுத் இரட்டை சதம்: இலங்கை அபார எழுச்சி!




பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் சமநிலை நோக்கி!

கண்டி, ஏப். 25

திமுத் கருணாரட்னவின் அபார இரட்டைச் சதமும், தனஞ்சய டி சில்வாவின் சதமும் கைகொடுக்க இலங்கை அணி நேற்றைய நாளில் மேலதிக விக்கெட் இழப்பின்றி 512 ஓட்டங்களை குவித்தது.

போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், இலங்கை அணியின் இந்த எழுச்சி போட்டியை சமநிலை நோக்கி நகர வைத்துள்ளது.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணி, இலங்கை அணியுடன் டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றது. கண்டி பல்லேகல மைதானத்தில் கடந்த 21ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் ஆடிய பங்களாதேஷ் 7 விக்கெட் இழப்புக்கு 541 ஓட்டங் களைப் பெற்று முதல் இனிங்ஸை நிறைவுக்கு கொண்டு வந்தது.

மூன்றாம் நாளில் ஆட்டத்தைத் தொடங்கிய இலங்கை அணி, நாள் முடிவடையும்போது விக்கெட்கள் இழப்புக்கு 229 ஓட்டங்கள் என்ற நிலையில் சற்றுத் தடுமாறியது. திமுத் கருணாரத்ன 85 ஓட்டங்களுடனும், தனஞ்சய டி சில்வா 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடங்கியபோது, அவர்கள் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே சதம் அடித்து அசத்தினார் திமுத் கருணாரத்ன. அவர் 247 பந்துகளை சந்தித்து 8 பௌண்ட்ரிகள் அடங்கலாக இந்த சதத்தைப் பூர்த்தி செய்தார்.

அவரைத் தொடர்ந்து 102 பந்துகளை எதிர்கொண்டு அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார் தனஞ்சய டி சில்வா. தொடர்ந்து வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்திய தனஞ்சய, 153 பந்துகளில் 14 பௌண்ட்ரிகளுடன் தனது 7ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். அவரைத் தொடர்ந்து கருணாரத்ன 150 ஓட்டங்களைக் கடந்தார்.

தொடர்ந்து, கருணாரத்ன 387 பந்துகளில் 21 பௌண்ட்ரிகளுடன் தனது முதல் இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். அவரைத் தொடர்ந்து தனஞ்சய 150 ஓட்டங்களை கடந்தார்.

இருவரின் சிறப்பான இணைப்பாட்டத்தாலும் மேலதிகமாக விக்கெட் இழப்பின்றி, இலங்கை அணி 500 ஓட்டங்களை கடந்தது. எனினும், போதிய வெளிச்சமின்மையால் 76 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் நேற்றைய நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. அப்போது, இலங்கை அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 512 ஓட்டங்களை குவித்திருந்தது.

திமுத் கருணாரத்ன 234 ஓட்டங்களுடனும், தனஞ்சய டி சில்வா 154 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். (ஐ)

# சிம்பாப்வேயிடம் வீழ்ந்தது பாகிஸ்தான்!

ஹராரே, ஏப். 25

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு-20 போட்டியில், சிம்பாப்வே அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு -20 தொடரில், 1-1 என்ற கணக்கில் சிம்பாப்வே அணி சமநிலை செய்துள்ளது.

சிம்பாப்வேயின் ஹராரே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிம்பாப்வே அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறை வில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 118 ஓட்டங்களை பெற்றது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கமுன் ஹூகாம்வே 34 ஓட்டங்களையும் சக்காப்வா 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில், மொஹமட் ஹஸ் னெய்ன் மற்றும் டேனிஷ் அஸிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் பஹீம் அஷ்ரப், ஹர்சாட் இக்பால், ஹரிஸ் ரவூப் மற்றும் உஸ்மான் காதிர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

119 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதி லுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் 99 ஓட்டங்களுக்கு அனைத்து விக் கெட்களையும் இழந்தது. இதனால் சிம்பாப்வே அணி 19 ஓட்டங்களால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது.

இதன்போது பாகிஸ்தான் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பாபர் அசாம் 41 ஓட்டங்களையும் டேனிஷ் அஸிஸ் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில், லூக் ஜோங்வே 4 விக்கெட்களையும் ரியான் பர்ல் 2 விக்கெட்களையும் பிளெஸிங் முஸரபானி மற்றும் ரிச்சர்ட் ன்கார்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை- தற்காப்புக்கலை



12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
பகல்
1.00 மணி : மழலைகள் நேரம் - சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
7.00 மணி : SPOT LIGHT - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஊடக பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்
10.00 மணி: பதிவு - நாடாளுமன்ற உறுப்பினர் - மனோ கணேசன்




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உடைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org